வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET. COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.

மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்





புத்தகம் 20 | திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆனி திங்கள் 32-ம் நாள் (16—7—1966) சனிக்கிழமை ரபி: அவ் 26 | இதழ் 7

## உள்ளூராட்சிமன்றங்களின்

# ஊழியர்களுக்கு புதிய சலுகை

## சேவை மாற்றத்திற்கு சிங்கள நிபந்தனை இல்லை

உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு அவர்களின் சேவை மாற்றத்தையிட்டு ஒரு புதிய சலுகை; வழங்கப்பட்டுள்ளது. 1-1-6 க்கு முன்னர் உள்ளூராட்சி மன்றச் சேவையில் சேர்ந்தஒருவர் இக்கால எல்லையின் பின்னர் முற்றிலும் புதிதான ஒரு பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவர் பழைய ஊழியராகவே கணிக்கப்படுவார். இந்த வசதியை உள்ளூராட்சி மன்ற ஊழியருக்கு ஏற்படுத்திக் கொடுக்க உள்ளூராட்சி மன்ற ஆணைக் குழு முடிவு செய்திருக்கிறது.



உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் 1-1-61க்குப் பின்னர் புதிதாக ஒரு பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அவர்களைப் புதிய சேவையாளர்களாகவே இற்றைவரை உள்ளூராட்சி மன்ற ஆணைக்குழு கணித்து வந்திருக்கிறது. இங்ஙனம் சேவை மாற்றம் பெற்ற உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தமது பதவியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், சம்பள உயர்வு போன்ற சலுகைகளைப் பெறுவதற்கும் ஆட்சிமொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்று கட்டுப்படுத்தப்பட்டிருந்தார்கள்.

இப்பொழுது உள்ளூராட்சி மன்ற ஆணைக்குழு எடுத்திருக்கும் முடிவு இங்ஙனம் சேவை மாற்றம் பெற்ற உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு ஒரு பெரிய சலுகையாக அமைந்திருக்கிறது. இவர்கள் பதவியை உறுதிப் படுத்திக் கொள்வதற்கோ, சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவற்றைப் பெறுவதற்கோ ஆட்சிமொழித் தேர்ச்சிபெறத் தேவையில்லை. அதுடன் இவர்கள் பழைய சேவையாளர்களாகவே கணிக்கப்படுவார்கள் இந்த முடிவு பொது சேவை ஊழியர்களுக்கும் காலகெதியில் வழங்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

## ஜீ. ஜீ. கடிதத்துக்கு நிதி அமைச்சர் பதில்

"உள்ளூராட்சி அமைச்சர் கனம். மு. திருச்செல்வம் அவர்களுடன் கலந்துபேசி 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி, சிங்களத்தில் தேர்ச்சிபெறாத காரணத்தால் சம்பள உயர்வு, பதவி உயர்வு நிறுத்திவைக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் அவற்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது." இவ்வாறு நிதியமைச்சர் திரு. யூ. பி. வன்னிநாயக்கா, திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்கு எழுதியுள்ள பதிலில் கூறியுள்ளதாக தெரிகிறது.

சிங்களத்தில் தேர்ச்சி பெறாத காரணத்தால், பதவி உயர்வு, சம்பள உயர்வு நிறுத்திவைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்க ஊழியர்களின் நிலைபற்றி பலமுறை தமிழரசார் நிதியமைச்சருட

(9-ம் பக்கம் பார்க்க)

## பொ. கட்சி வட்டாரத்தில் அதிருப்தி

தற்பொழுது அமெரிக்கா சென்றுள்ள உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் இலங்கை வருமுன்பே, பொன்னம்பலம் கட்சியின் மாநாடு நடைபெறுமெனத் தெரிகிறது. திரு. மு. சிவசிதம்பரம் பொ. கட்சியின் இணைச் செயலாளர்களில் ஒருவராக இருந்தும்கூட அவரை விடுத்து பொ. கட்சி மாநாடு கூட்டுவதையிட்டு பொ. கட்சியிலுள்ள உடுப்பிட்டி பிரதிநிதியின் ஆதரவாளர்கள் மத்தியில் பலத்த அதிருப்தி நிலவி வருவதாக அறியப்படுகிறது.

பொ. கட்சி மாநாடு பற்றி ஆலோசிக்கும்படி அதன் செயற்குழு சமீபத்தில் கூடிய போது, அமெரிக்கா சென்றிருக்கும், திரு. மு. சிவசிதம்பரம் நாடு திரும்பிய பின்னரே மாநாடு நடத்தப்பட வேண்டுமென பலர் வற்புறுத்தியதாக தெரிகிறது. ஆனால் திரு. ஜீ. ஜீ. யோ அதை முற்றாக நிராகரித்து விட்டதாகவும், யாருக்காகவும் காத்திருக்க தம்மால் முடியாதென்றும், குறிப்பிட்டபடி ஆகஸ்டிலேயே மாநாடு நடைபெற்றாக வேண்டுமென்றும் ஒரேயடியாக கூறிவிட்டதாகவும், தலைவரின் இந்த சனநாயகமற்ற சர்வாதிகாரப் போக்கினால், அவரது கட்சியிலுள்ள உடுப்பிட்டி பிரதிநிதியின் ஆதரவாளர்கள் மத்தியில் மன அதிருப்தியும் வெறுப்பும் நிலவி வருவதாயும் கூறப்படுகிறது.



உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் திணைக்கள ஊழியர்களினால் கொழும்பு ஹோட்டல் தப்ரபேனில் கௌரவ அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்து உபசாரத்தின் போது மேற்படி சங்கத் தலைவர் திரு. ஏ. ஜே. பி. பெர்னாண்டோவை அமைச்சருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார் கே. எஸ். இராசேஸ்வரன்.

புதிய தொடர் கதை

"அலை கடல் தான் ஓயாதோ"

செங்கை ஆழியான்

எழுதுகிறார்

31-7-66-ம் திகதி ஆரம்பமாகிறது

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 23-7-66 காலை தலை நகரில் 22-7-66 மாலை கிடைக்கும்

பெர்னட்ஷா வாழ்வில் — 1

## "இருவரால் என்ன செய்ய முடியும்?"

— சி. சண்முகலிங்கம் —

அறிவும் ஆற்றலும் நிரம்பிய அறிஞர் பெர்னட்ஷாவை அறியாதார் இலரே எனலாம். தன் நகைச்சுவை நிரம்பிய பேச்சுக்களினால் மக்கள் உள்ளங்களில் நீங்காத நினைவாகி விட்டார். இளமைப் பிராயத்தில் வறுமையின் கோரப்பிடிக்கு ஆளான ஷா, கற்க வசதியின்றி தெருத் தெருவாக அலைந்து திரிந்தார். தன்னை வறுமை வாட்டுவதை எண்ணி அவர் கவலையடையவில்லை. வாழ்க்கையில் ஏற்படும் பல சோகச் சம்பவங்களை, தனது நகைச்சுவை மிகுந்த பேச்சுக்களினாலும், செயல்களினாலும் சரிப்படுத்திக் கொள்ளும் திறமை வாய்ந்தவர் பெர்னட் ஷா.

ஜோர்ஜ் பெர்னட்ஷாவின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் நகைச்சுவையைக் கொண்டது. ஒரு முறை ஷாவின் நாடகமான "ஆயுதங்களும் மனிதனும்" என்பது லண்டன் நகர அரங்கொன்றில் அரங்கேற்றும் நாடகமானதால் ஷாவும் அதைப் பார்க்க வந்திருந்தார். நாடகம் ஆரம்பித்ததும் ஒருவன் எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு "ஊ ஊ" என்று கூச்சலிட்டான்.

இச்சம்பவம் பார்வையாளர்களுக்கு பெரிதும் இடைஞ்சலை ஏற்படுத்தியது. அவர்களால் அவனை வெளியேற்ற முடியாது போயிற்று. "நாடக அரங்கேற்றத்தன்று இப்படியாக நடைபெறுகின்றதே" என எண்ணி நாடகக் கம்பெனியார் கவலைப் பட்டனர். இப்படியான சூழ்நிலையை சமாளிக்க அறிஷர் ஷாவுக்கா தெரியாது? பார்வையாளர்கள் நடுவில் எழுந்து நின்று "ஐயா, கூச்சலிடுபவரே! இந் நாடகம் பற்றி நானும் உம் அபிப்பிராயத்தைத் தான் கொண்டிருக்கிறேன். ஆனால் இத்தனை மக்களுக்கும் இடையில் நாமிருவரும் என்ன செய்வது?" என்று கேட்டுவிட்டு வந்தமர்ந்தார். நாடகமும் தொடர்ந்தது. கூச்சலும் ஓய்ந்தது.

குறிப்பு:

[அறிஞர் பெர்னட்ஷாவின் நினைவு தினம் இம்மாதம் 21ம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அதை யொட்டி அறிஞர் பெர்னட்ஷாவின் வாழ்வில் நடைபெற்ற சில நகைச் சுவை சம்பவங்கள் தொடர்ந்து சில வாரங்களுக்கு வளர்மதியில் இடம் பெறும்.

—வளர்மதிமாமா

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

## கண்டேன் கவிஞர்பெருமக்களை!

—சி. யோகேஸ்வரி—

இரவு வேளை. வெண்ணிலவு தண்ணொளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. நிலவொளியில் அருகே 'சல சல' வென ஓடிய ஆறு பாலாறுகக் காட்சியளித்தது. நதியின் 'சல சல' சப்தத்தை வென்று கொண்டு சிறுவர்களது 'கல கல' வென்ற ஓசை கேட்டது. திரும்பி நோக்கினேன். சின்னஞ் சிறுவர்கள் பலர் மணற்பரப்பில் விளையாடிக்கொண்டிருந்தார்கள் அவர்களிருந்த இடம் நோக்கிச் சென்றேன்.

அவர்களின் மத்தியிலொருவர் இருந்தார். வெண்மையான உடையும் தலைப்பாகையும் அணிந்திருந்தார். கம்பீரமான தோற்றமும், வீர வுணர்வை வெளியிடும் பார்வும் கொண்ட அவர், குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தார். இரு சிறுவர்களைத் தம் மடிமீது இருத்தி, இரு கைகளாலும் அணைத்தவண்ணம்; இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தார் அவர். அவர் வேறுயாருமல்ல. நம் பாரதியாரேதான்.

நான் அருகே சென்றபொழுது 'என்றும் புறஞ் சொல்லலாகாது பாப்பா" எனப்பாடிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் பாடல் நின்றது. 'ஏனப்பா பாடலை நிறுத்திவிட்டீர்கள்?' என வினவினேன். 'நின்று விட்டது" என்று கூறிச் சிரித்தார், 'ஏன் பெரியவர்களுக்குப் பாடிக் களைத்துவிட்டீர்களோ? சிறுவர்களுக்காகப் பாடத் தொடங்கிவிட்டீர்களே' எனக் கேட்டேன். 'இன்றைய சிறுவர்கள் தான் நாளைய உலகைச், சிருஷ்டிக்கும் சிற்பிகள். அவர்களுடைய வெள்ளையுள்ளங்களில் கள்ளம் புகாது இன்றே தடுத்துவிட்டால் நாளைய உலகம் நல்லவர்கள் கையிலிருக்குமல்லவா?' என்று பதிலளித்தார் பாரதியார்.

'ஏன் புறஞ் சொல்லவாகாது என்று கூறுகிறீர்கள் அப்பா?' என வினவினேன், 'மகளே! புறங் கூறுவது போற் தீமை எதுவுமே யில்லை, ஒருவரைப் பற்றி அவரில்லாத நேரத்தில் குறை கூறுவது எவ்வளவு கெட்ட செயல். ஒருவரிடம் நாம் குறையேதாவது கண்டால் அவரிடமே கூறிவிடுவது நல்லது. முடியாவிட்டால் அதை மற்றவருக்குக் கூறுவதால் என்ன நன்மை? நாம் புறங் கூறுவதைக் கேட்கும் மற்றவர்கள் நம்மை மதிக்கமாட்டார்கள். நம்முடன் உறவு கொள்ள மாட்டார்கள். எம்மை வெறுப்பார்கள். மற்றவர்களது குற்றங்களைக் காணும் நாம், அது போல் நம் குற்றங்களைக் கண்டு களைந்தால எவ்வளவு நல்லது. இதைத்தான் நம் வள்ளுவர் பெருமான்

"ஏதிலார் குற்றம்போல்
தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு
முயிர்க்கு."

என்று கூறுகின்றார்"

'என் குறளைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள் பாரதியாரே' நம் பேச்சினிடையே கணீரென்றொலித்தது ஒரு குரல். திரும்பிப் பார்த்தேன். நம் வள்ளுவர் பெருமானே நின்றிருந்தார். 'வாருங்கள் தாத்தா, உங்களைப் பற்றி நினைத்தவுடனேயே வந்துவிட்டீர்களே. உங்களுக்கு நூறு வயது தாத்தா' நான் கூறிமுடிக்கு முன்னரே பாரதியார் கல கல வென்று சிரித்தார்.

'இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்துவிட்டவருக்கு வயது நூறு?' பாரதியாரின் சிரிப்பிற்கு அவரே காரணங் கூறினார்.

'தமிழ் உள்ள காலம் வரை வாழ்வாரென்று நான் கூறியா தெரிய வேண்டும்'

'அங்கும் தவறு. இங்கும் தவறு. உலக மொழிகளுள்ள வரை வாழ்வார். குறள் எத்தனை மொழிகளிலிருக்கிறது தெரியுமா?' மீண்டும் பாரதியார் என்னை மடக்கினார்.

'நம் தமிழ் உலகமுள்ள வரை இருக்குமே, பின் ஏன் மற்ற மொழிகளை இங்கு இழுக்க வேண்டும்?' என்று பதிலளித்தேன் நான்.

'தமிழ் உள்ளவரை நான் மட்டுமா வாழ்வேன், பாரதியாருந்தான் வாழ்வார்' என்று கூறினார் வள்ளுவர் பெருமான்.

'தாத்தா புறங்கூறுமை பற்றி உங்கள் கருத்தைக் கூறுங்களேன். கேட்போம்' அதற்கு மேல் அவர்களுடன் பேசினால் என்னை மட்டந் தட்டிவிடுவார்களென்ற பயத்தில் நான் பேச்சைத் திசை திருப்பினேன்.

'புறங்கூறுமைபற்றிக் குறள் எழுதிய பொழுதே கூறிவிட்டேனே'

ஆமாம் பத்து முத்துக்கள் குறளாரத்தில் இதுபற்றியவைதான்' என்றார் பாரதியார்.

'குழந்தாய்! ஒருவரின் கண் முன் அவர் குறைகளைக் கூறினாலும் புறங்கூறக் கூடாது. மற்றொன்று புறங்கூறி வாழ்வதிலும் பார்க்க இறப்பது எவ்வளவோ மேலானது. ஆம்.

புறங்கூறிப் பொய்த்துயிர்
வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.'

என்றார் வள்ளுவர் பெருமான்.

வள்ளுவரும் பாரதியாரும் கூறியவற்றை யாரிடமேனும் கூற வேண்டுமென்னும் ஆவல் எழுந்தது.

அப்பொழுது 'நன்றாக இருக்கிறது பரீட்சைக்குப் படிக்கும் அழகு' என்ற என் அண்ணனின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தேன். எதிரே திருக்குறளும், பாரதியார் பாடல்களும் விரித்தபடியே கிடந்தன. அப்பொழுதுதான் நான் கண்டது கனவென்பது விளங்கியது.

## நன்நபிநாயனர்

அக்கிரமம் சூழ்ந்த அவ் அரோபியா தேசத்தில் அக்கிரமத்தை ஒழிக்கும் அகல்விளக்காய், அகிலம் போற்றும் அண்ணலாக, ஆண்டவனின் அருமை தூதராக, இஸ்லாம் தந்த இன் சுடர்விளக்காய் இருள் சூழ் நாட்டிற்க்கு ஒழிதரும்வெண மதியாக மகான் முஹம்மது முஸ்தபார சூல் (ஸல்) அவர்கள் கி. பி. 510ம் ஆண்டு றபியுல் அவ்வல் பிறை 12ல் திங்கள் காலை பிறந்தார்கள்.

நற்குணமும், நல்லறிவும் பொருந்திய பெருமானர் (ஸல்) அவர்கள் பிறந்த அவ் ஆண்டுக்கு-ஆமுல்பீல் (யானை வருடம்) எனப்பெயர் பெறும். பிறக்கு முன் தந்தையையும் பிறந்து 6 வருடத்தில் தாயாரையுமிழந்தார்கள். அன்னரின் நற்சேவையையும் நல்லறிவையும் புகழ வந்த பெரியார்களில் ஒருவரான அறிஞர் பெர்னட்சா, யான் அந்த அற்புதமனிதனின்வாழ்க்கையைப் படித்தேன் அவர் மனிதகுலத்தை இழிவிலிருந்து காப்பாற்ற போந்தனர் எனக்கூறுகிறர். மேலும் எல்லாத்தீர்க்கதரிசிகளிலும், மதபோதகர்களிலும் நபிகள்நாயகம் (ஸல்) வெற்றிகரமானவரென 'ஆங்கிலக்கலைக் களஞ்சியத்தில் கூறப்பட்டுள்ளது இன்னும் வரலாற்றில்முற்றிலும்தனித்தன்மை வாய்ந்தஒர் அதிர்ஷ்டத்தின் காரணமாக நபிகள் நாயகம் மூன்றுவிதஸ்தாபகராக விளங்குகிறர்கள். அவர்கள்ஒரு சமுதாயத்தின் ஸ்தாபகர், ஒரு சாம்ராச்சிய ஸ்தாகர் ஒரு மதபோதகர் எனகத்தோலிக்கமதகுருமித் கூறியுள்ளார்.

இப்படியாக அன்னிய வேதப் பெரியார்கள் கூட நாயகம் (ஸல்) நற்பண்புகளையும் நல்லறிவையும் புகழ்ந்து கூறியுள்ளனர். எனவே முஸ்லிம்களாகிய நாம் நாயகம் (ஸல்) அவர்களையும் அவர் நமக்களித்த வேதநெறிகளையும், சுன்னத்துக்களையும் நாம் பின்பற்றி நம் மதம் வளர நல்முயற்சி செய்வோமாக.

இக்பால்
விடத்தல்தீவு

## வர்த்தக தந்திரம்

யூதர்களின் வர்த்தகத் திறமையைக் குறித்து ஓர் அமெரிக்க நகைச்சுவைத் துணுக்கு இது.

நியூயார்க்கில் ஓர் யூத கண்ணடி வியாபாரி தமது மகனுக்கு வர்த்தக யுக்தி சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

'ஐஸாக், இங்கே பார். புதுக் கண்ணடி போட்டுக் கொள்ள ஒருவர் கடைக்கு வருகிறர் என்று வைத்துக் கொள். அவர் கேட்கிற மாதிரி ஃபிரேம் ஒன்றில் கண்ணடியைப் பொருத்திக் கொண்டு வா. அவர் எதிரே அதை மேலும் கீழும்பார் அதைச் சரிசெய்வதுபோலச் செய்து, கண்ணடியைப் பல தடவை வெல்வெட்டன் துணியால் துடை. பிறகு, மூக்குக் கண்ணடியை அலுங்காமல் பிடித்த, வாடிக்கைக் காரரின் காதில் மாட்டி விட்டு, உன் கைக்குட்டையால் தூசியைத் தட்டிவிடுவதுபோல் லேசாகத் தட்டு, மூக்குக் கண்ணடி சரியாக இருக்கிறதா என்ற பாவனையில் அவர் தம்மை நிலைக் கண்ணடியில் பார்த்துக் கொள்ள ஐந்து நிமிஷம் விட்டு விடு. யாருக்குத்தான் தன் அழகை நிலைக் கண்ணடியில் பார்த்துக் கொள்ள ஆசை இராது!

'ஐந்து நிமிஷம் அவர் தமது அழகை ரசித்துக் கொண்டபின், மெதுவாக அவர் பின்னே வந்து, தணிவான குரலில், 'இருபதுடாலர்" என்று சொல்லி, நிலைக் கண்ணடியில் அவர் முகத்தைக் கவனி.

'அவர் முகத்தைச் சுளிக்கவில்லையென்றால், 'ஒவ்வொரு கண்ணுக்கும்' என்று சொல்லு. அப்போதும் அவர் முகத்தைச் சுளிக்கவில்லையென்றால் 'ஃபிரேம் தனி—பத்துடாலர்' என்றுசொல்லு. அப்போதும் அந்த ஆசாமி முகத்தைச் சுளிக்க வில்லையானல், ஃபிட்டிங் சார்ஜ் பத்து டாலர்' என்று சேர்த்துக் கொள். அப்போதும் அவர் முகத்தைச் சுளிக்க வில்லையென்றால், 'கூட்டின் விலை ஐந்துடாலர்' என்று சொல்லு. அப்போதும் அந்த மடையன் முகத்தைச்சுளிக்க வில்லையென்றால், அவன்தான் தம்பி நியூயார்க்கிலேயே முதல் தர ஏமாந்த சோணகிரி. அப்புறம் அவனிடம் நீ என்னென்ன சொல்லி என்னென்னதான் வசூலிப்பாயோ, அது உன் சொந்த சாமர்த்தியத்தைப் பொறுத்தது!'

—

## பேச்சுப் போட்டி முடிவு

ஏட்டியாந்தோட்டை மாணவ முத்தமிழ் மன்றத்தினர், கடந்த 8-7-66-ல் நடாத்திய பேச்சுப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு! மேற் பிரிவு ஆண்கள்: 1. செல்வராசா; 2. செல்வன் வீ. இலக்குமணன். மேற்பிரிவு பெண்கள்! 1. வே. முத்தம்மா; வே ஜெயலட்சுமி, 2. செல்வி அ. அன்னுள் ரட்ணம்; 3. செல்வி கா. புவனேஸ்வரி. கீழ்ப்பிரிவு. ஆண்கள்: 1. செல்வன் எஸ். அன்று; 2. செல்வன் எம். சாள்ஸ்; 3. செல்வன் எம். ஆஞ்சலோ; கீழ்ப்பிரிவு பெண்கள்: 1. செல்வி ச. சுசிலா; 2 செல்வி மு. மனோரதி. 3. செல்வி ற. வில்லி ஜெஸ்மின், இவர்களுக்கான பரிசளிப்பு அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்ற பெருவிழாவின் போது நடைபெறும்.

'ஓடிப் போனவன்'

நவசோதி

எழுதும்

புதிய தொடர் கதை

யூலை 24ம் திகதி இதழில் ஆரம்பமாகிறது.




புலியூர்க் கேக்கே',
தேதுகல.

கே! நீங்களும் உங்கள் மனைவிக்கு சாறிகள் ஏதும்......?

ப: ஐயோ அதைஏன் கேட்கிறீர்! அவள் தன்னிடமிருந்த சாறிகளையெல்லம் கொண்டு போய் இரகசியமான ஓர் இடத்தில் பதுக்கிவிட்டாள். விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் வீட்டைச் சோதனை போடுவார்களென்று பயந்து.

கே: மனிதன் ஏன் பொறுமைப் படுகிறான்?

ப: மனிதனின்வளர்ச்சிக்கு அஃது ஓரளவு தேவைப்படுவதால்.

ஃ

வி. க. குழந்தைவேலு,
கண்டாவளை.

கே: நாட்டிற் பரவி வரும்மூட நம்பிக்கைகளை அகற்றிப் பகுத்தறிவைப் பரப்ப என்னசெய்ய வேண்டும்?

ப: செய்யவேண்டும் பிரசாரம்! பிரசாரம்!! பிரசாரம்!!!

ஃ

எஸ். என். கே. பாலசுந்தரம்,
பதுளை.

கே: கலியுகத்தில் பிரமசிருஷ்டி நாளுக்குநாள் அதிகரிக்கிறதே அதன் காரணமென்ன?

ப: கலியுகத்தின் அழிவு நெருங்கிக் கொண்டிருப்பதே காரணம்.

கே! உலகத்தில் மனிதன் செய்யும் சாசுவதமான காரியம் எது?

ப: சிந்திப்பது.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: பிரதமர் திரு. டட்லிஇன்னும் திருமணம் செய்துகொள்ளாமலிருப்பது எதைக் காட்டுகிறது?

ப! அவரது நெஞ்சுரத்தைக் காட்டுகிறது. அவரே கூறியுள்ளார் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் வைத்து திருமணம் செய்வதில்லை என்று தான் எடுத்த பிரதிக்ஞையை இன்னும் பாதுகாத்து வருவதாக.

ஃ

பி. டி. பாலரத்தினம்,
கொழும்பு-12.

கே! தமிழரசுக்கட்சிஏற்கனவே தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தபின்னும் தனது சர்வகட்சி வட்டமேசைமாநாட்டுக்குத் திரு. பொன்னம்பலம் அவர்கள் திரும்பவும் உயிர் கொடுப்பது ஏன்?

ப! வேறு ஆக்கபூர்வமான எந்தத் திட்டமும் அவரிடம் இல்லாததால்!

ஃ

த. இரத்தினசபாபதி,
கொழும்பு-14.

● கே: உத்தேச மாவட்டசபை நிர்வாகம் ஏற்பட்டபின்பு இலங்கைக்குப் பொதுவாகவும் தமிழ் பேசும் மக்களுக்குச்சிறப்பாகவும் என்ன நன்மைகள் உண்டு.

ப! தேசிய இனங்களுக்குத் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்வதில் அதிகமானபொறுப்பு இதன்மூலம் கிடைக்கிறது. இதனால் நாட்டின் நிர்வாகம் திறமையாக நடைபெற வழிபிறப்பதுடன், அமைதியும் ஐக்கியமும் ஏற்பட்டு, நாடு முன்னேற இடம் கிடைக்கும்.

ஃ

சி. தயாநாதன்,
நீர்வேலி.

கே: 'மாவட்டசபைகள் தமிழினத்திற்கு என்றும் நன்மை தராது' என்று திருகோணமலை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் யாழ்ப்பாணப் பிரதிநிதி பேசியிருக்கிறாரே!

ப! அவரது ஆருடம் எதுவுமே இதுவரை பலனளிக்கவில்லை!

ஃ

—மகா—,
கொழும்பு.

கே: 'பூங்கா' என்ற அழகான தமிழ் சொல்லிருக்க 'உத்யானய' என்ற சிங்களச் சொல்லைத் தமிழிலும் அதே உச்சரிப்புடன் பொது இடங்களில் எழுதியிருக்கிறார்களே,

ப: அது வடமொழிச் சொல். சிங்களமல்ல. அதற்கான சிங்களச் சொல் 'உயன' என்பதே. வடமொழிச் சொற்கள் சில தமிழ், சிங்களம் இரண்டிலும் உபயோகிக்கப்படுவதால் அப்படி எழுதியிருக்கலாம். தமிழில் பொருத்தமான சொல் 'பூங்கா' தான்.

ஃ

ஆர். ஆனந்தசுப்பிரமணியம்,
நீர்கொழும்பு.

கே: என் சிநேகிதி பஸ்ஸில் ஒருவரைச் சந்தித்து அவரை ஓடும் ரெயிலில் திருமணம்செய்தாள். அவர்களின் தேன் நிலவு பறக்கும் விமானத்தில் நிகழ்ந்தது. குழந்தையைக் கப்பலில் பெற்றெடுத்தாள். குழந்தையின் பெயர் சூட்டு விழா எங்கே?

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப! அண்டவெளியை ஊடுருவிச் செல்லும் ரொக்கட்டில்.

ஃ

மு. இராசதுரை,
வண்ணார்பண்ணை,

கே: '1952ம் ஆண்டு டட்லி சேனநாயக்கா பிரதமராகக் காரண கர்த்தாவாகவிருந்தவர் திரு. ஜீ ஜீ. தான் என்று ஒரு காங்கிரஸ் நண்பர் கூறுகிறார். இது சரியா?

ப! இல்லை! திரு. டட்லியின் தந்தைசெய்த ஏற்பாடுதான் காரணமாக இருந்ததாம். திரு. ஜீ. ஜீ. அவரது தந்தை இல்லையே?

ஃ

செ. பெ. கிருஷ்ணன்,
இரத்தினபுரி.

கே: விசேட பஞ்சப்படி ரூபா 17.50க்காக நடத்தப்படும் வேலை நிறுத்தத்தில் 'இலங்கைதொழிலாளர் காங்கிரஸ்' கலந்துகொள்ளவில்லை என்று தாக்கியிருக்கிறீர்களே! இலங்கைத் தொழிலாளர் கழகம் வேலைநிறுத்தம் செய்யாததையிட்டு என்னசொல்கிறீர்கள்?

ப! கழகம் கலந்துகொண்டிருக்கிறதே! இ. தொ. கா. கலந்துகொள்ளாவிட்டாலும், ஒதுங்கியிருக்கலாமல்லவா? வேலைநிறுத்தமொன்றை ஒரு தொழிற்சங்கமே முறியடிக்க முயற்சி செய்வது இந்நாட்டின் தொழிற்சங்க இயக்கத்திற்கே குழிதோண்டுவதாகும்.

ஃ

ஐ. நடராசா,
வட்டக்கச்சி,

கே: பதினன்கு பதினைந்து வருடங்களுக்கு முன்பே அதிக பாடங்களுடன் திறமையாகச் சித்தியெய்தி ஒரு தொழிலுமில்லாமல் இருப்பவர்களுக்கு இலங்கை அரசாங்கம் உத்தியோகம் கொடுக்குமா?

ப: 51 வருடங்களுக்கு முன்பு 101 பாடங்களுடன் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்க்க வேண்டாம். ஒருவர் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கு அது மட்டுந்தானா இருக்கிறது? கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியவற்றிலீடுபட்டு பொருள் திரட்ட முயற்சிசெய்யவேண்டும்.

ஃ

பி. வி. பிச்சைபழனி,
ஆனமலைதோட்டம்.

கே: சுதந்திரன் பத்திரிகையில் வெளிவரும் அத்தனைசெய்திகளும் உண்மையானவைகளா?

ப! சுதந்திரன் செய்திகளை சோடினை செய்வதோ, திரிப்பதோ, முன்னுக்குப்பின் முரணாகச் செய்திகளை வெளியிடுவதோ இல்லை. கிடைக்கும் செய்திகளை அப்படியே வாசகர்களிடம் சமர்ப்பித்து விடுகிறான் சுதந்திரன்.

ஃ

எஸ். கந்தையா,
அல்வாய்.

கே: அரிசிமான்யம் வெட்ட வேண்டும் அல்லது ரூபா மதிப்பைக் குறைக்கவேண்டும். இல்லாவிட்டால் உலக வங்கியிலிருந்து ஒரு சதம்கூட இலங்கை கடன்பெற முடியாது என்று ஒரு பத்திரிகையில் ஒருவர் கூறியிருக்கிறாரே அதுபற்றித் தங்கள்கருத்தென்ன?

ப! அரிசிமான்யத்தைக் குறைப்பதால் ஏற்படும் அரசியல் விளைவுகளை உலகவங்கி உணர்ந்திருக்கிறது. இலங்கைபோன்ற சிறிய நாடொன்றில் ரூபாயின் மதிப்பைக் குறைப்பதால் உலகவங்கிக்கு பெரும் பயன் எதுவும் ஏற்படமுடியாது. இந்நாட்டைப் பொறுத்தவரையில் உலக வங்கியின் கடன் தாமதமாவதற்கு வேறுகாரணங்களுண்டு.

ஃ

டி. எம். சபாபதி,
கொழும்பு-6.

கே: எதிர்க்கட்சிகளின் அடுத்த நடவடிக்கை என்ன?

ப! மசாலைவடைக் கடைக்காரர்களின் வயிற்றில் அடிப்பதுதான் அடுத்த நடவடிக்கையாம்; அதாவது! 'மசாலை வடை லைனை'க் கைவிடுவது. இந்த 'லைனுல்' மசாலை வடைக்கு மார்கெட்டில்நல்ல கிராக்கி ஏற்பட்டிருந்தது.

ஃ

எஸ். எஸ். குருநாதன்,
பதுளை.

கே: வேலைநிறுத்தம் செய்யும் வங்கி ஊழியர்களுடன் தொழில்பகுதி பேச்சுவார்த்தை நடத்தமுடியுமானுல், வேலை நிறுத்தம் செய்யும் தோட்டத் தொழிலாளர்களுடன் ஏன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது?

ப! முன்னவர் ஆயிரக்கணக்கில் வேலைநிறுத்தம்செய்துள்ளனர். பின்னவரோ இலட்சக்கணக்கில் வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கானவர்களுடன் எப்படியோ சிரமப்பட்டாவது பேச்சுவார்த்தைகளைநடத்தலாம். இலட்சக்கணக்கானவர்களுடன் எப்படிப் பேச்சுவார்த்தைகளை நடத்தமுடியும்? அது மனித சக்திக்கு அப்பாற்பட்டவிஷயமாச்சே!

● இந்த அடையாளத்தையுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.



ஜீ. ஜீ. கண்டுபிடித்த உண்மை

இந்நாட்டின் கல்வியமைச்சர் பதவியை தகுதிபெற்றவர் அலங்கரித்துக்கொண்டிருக்கிறார்.

—திருமலையில் திரு. ஜீ. ஜீ.

அவிவேகபூரண குரு ஜீ. ஜீக்கு இந்த உண்மையைக் கண்டுபிடிக்க இத்தனை காலம் தேவைப்பட்டதா? என்றாலும் அப்பதவி அவரை வந்து சேராது என்பது மட்டும் உண்மை.

வான்கோழி ஆட்டம்!

பெர. கட்சி மாநாடு வவுனியாவில் 3 தினங்களுக்கு நடைபெறுமாம்.

—செய்தி.

கானமயிலாடக்கண்டிருந்த வான்கோழி தானுமது வாகப் பாவித்து......

கா(ர்)தல்

கார் விபத்திலேற்பட்ட காதல் கல்யாணத்தில் நிறைவெய்தியது.

—செய்தி'

இனிமேல் அழகிய யுவதிகள் பிரயாணம் செய்யும் கார்களுக்கு அடிக்கடி விபத்துக்கள் ஏற்படலாம்.

கிளித் திருட்டு

இலண்டனில் ஒரு வீட்டில் திருட வந்தவர்களை கிளி பிடித்துக் கொடுத்தது.

—செய்தி.

இனிமேல் திருடர்கள் வீடுகளுக்கு திருடப் போகும் போது முதலில் கிளியைத் திருடுவார்களோ!

அந்தக் கணக்கு அதிகமிருக்கும்!

126, 355 பேர் இலங்கையில் வரி செலுத்துகின்றனர்.

—செய்தி.

வரிக்குடிமிக்கி கொடுப்போர் கணக்கு எப்பொழுது வெளி வருமோ? அது இன்னும் அதிகமாக இருக்கும் என்கிறார் ஒரு வருமானவரி அதிகாரி.

இது என்ன விளக்கமோ?

புரட்சிவாதிக்கும் சீர்திருத்த வாதிக்கும் உள்ள வித்தியாசம் மார்க்சீய தத்துவத்தைப் புரிந்து கொள்ளும் விதத்திலேயே அமைந்திருக்கிறது.

—'சண்'

திரிபு வாதத்துக்கும், சீர்குலைவு வாதத்துக்கும் இது ஓர் புதிய விளக்கம் போலும்.

## உங்கள் குறைகள் என்ன?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்;
மஹா மாந்திரீக கலாநிதி
பி. எம். திசாநாயக
(அரசாங்கப் பதிவுசெய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
கம்பளை, போன்: 454

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# பாராளுமன்ற வரலாற்றில் புதுமை

## அரியணை உரைக்கு தமிழில் நன்றி உரை

### செனட்டர் நடராசா முன்மொழிந்தார்

‘இந்நாட்டின் பாராளுமன்ற வரலாற்றில் தமிழ் பிரதிநிதி ஒருவர் அரியணை உரைக்கு நன்றிநவிலும் பிரேரணையை முன்மொழிவது இதுவே முதற் தடவையாகும். அத்துடன் இப்பிரேரணை தமிழில் முன் மொழியப் படுவதும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இதனால் இந்நாட்டில் இன ஒற்றுமை எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதென்பதை உலகிற்கு எடுத்துக் காட்டச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதுடன், தேசிய அரசாங்கம் ஒருவருட காலத்தில் எந்தகைய சாதனையை செய்திருக்கிறது என்பதும் தெளிவாகிறது’ என்று மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா கடந்த எட்டாம் திகதியன்று அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை முன்மொழிந்து மூதவையில் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் இப்பிரேரணை மீது பேசுகையில் கூறியதாவது:

‘என்னை நன்றி நவிலும் பிரேரணையை பிரேரிக்கும்படி கேட்டதற்காக நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். பாராளுமன்றத்தின் சரித்திரத்திலேயே முதன் முறையாக ஒரு தமிழ் பேசும் பிரதிநிதி நன்றி நவிலும் பிரேரணையை பிரேரிக்க சந்தர்ப்பம் இடைத்துள்ளது. அதிலிருந்து இந்நாட்டு மக்களின் சௌஜன்யமான வாழ்க்கை எவ்வளவோ பெருகி வந்திருக்கிறதென்பதை உலகம் சரியாகச் சொல்லக் கூடியதாக இத்தேசிய அரசாங்கம் சென்ற ஒருவருடகாலமாகக் கடமையாற்றியிருக்கிறதென்பதை நாம் அறியக் கூடியதாயிருக்கின்றது. நன்றி நவிலும் பிரேரணை:

#### நன்றித் தீர்மானம்

‘மேன்மை தங்கிய மகா தேசாதிபதியின் திருச்சமுகத்துக்கு, இலங்கை செனற்று உறுப்பினராகிய நாம் பாராளுமன்றத்தைத் திறந்து வைத்து தாங்கள் ஆற்றிய அரியணை உரைக்கு நன்றி கூறுகிறோம்.

எங்கள் முன்னிலையில் இடப்பட்டிருக்கும் சகல விடயங்களிலும் எமது பூரண கவனத்தைச் செலுத்துவோம் எனப்பணிவுடன் தங்களுக்கு உறுதி கூறுகிறோம்.’

மகா தேசாதிபதியவர்கள் தங்கள் அரியணைப் பிரசங்கத்திலே, முக்கியமாகச் சென்ற ஒரு வருடகாலமாக மக்கள் மத்தியில் நிலவும் சமாதானத்தையும், தேசிய அரசாங்கம் ஆற்றிய பணியிலிருந்து மக்கள் ஒருமைப்பாட்டுடனும் ஒற்றுமையாகவும் வாழ்கின்றார்கள் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். அதற்கு இலங்கை வாழ் மக்கள் அனைவரும் தேசிய அரசாங்கத்துக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள்.

‘அடுத்த பாராளுமன்ற காலத்துள் அமுல் நடாத்தப்படவேண்டிய தேசிய அரசாங்கத்தின் கொள்கைகளையும்—ஏனைய முக்கிய நடவடிக்கைகளையும் அரியணை உரை தன்னகத்தே கொண்டிருக்கிறது. அடுத்து எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகளும் இதில்நிழலாட்டமாகக்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

#### வாக்குறுதியை காப்பாற்றினார்

‘முதலாவது அரியணைஉரையில் சிறுபான்மையினரின் மொழிக்கு உரிய இடம் கொடுக்கப்படுமென தேசிய அரசாங்கம் உறுதி கூறியிருந்தது. தமிழ்மொழி விசேட சட்டவிதிகளைக்கொண்டு வந்ததின் மூலம் எங்கள் பிரதமர் கொடுத்த வாக்குறுதியை அமுல் நடாத்தியுள்ளார். இதனால் தமிழ்பேசும் மக்கள் ‘எங்கள் மொழிக்கு உரிய இடத்தை நாம்பெற்று விட்டோம்’ என்று உலகிற்கு கூறக்கூடியதாக இருக்கிறது.

‘எங்கள் பிரதமர் இதைத் துணிவுடன் செய்திருக்கிறார். அவர் ஒரு கொள்கை உள்ளவர், பாரம்பரிய ஒழுக்கம் நிறைந்தவழிவந்தவர். இதன் மூலம் சகல பகுதி மக்களிடையேயும் குறிப்பாக சிங்களம் பேசும் மக்களிடையேயும் தமிழ் பேசும் மக்களிடையேயும் உறவை ஏற்படுத்தி ஒரு புதிய சகாப்தத்தையே ஏற்படுத்திவிட்டார். சிறுபான்மையினர் திருப்தியுடன் வாழவேண்டும் என்பதை அவர் உணர்ந்திருக்கிறார்; இதுதான் சனநாயகத்தின் சாரமாகும்.

#### சிறுபான்மையினர் உரிமைகள்

‘நாம் ஐ. நா. சபை அங்கத்தவர்கள். இச் சபையின் மிக முக்கிய கொள்கைகளில் ஒன்று சிறுபான்மை இனங்களின் உரிமைகளை அங்கீகரிப்பதாகும். இந்த நாட்டின் சிறுபான்மை இனமான—தமிழ்பேசும் மக்களின்—உரிமைகளை கடந்த ஆண்டு பிரதமர் மதித்திருக்கிறார். இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைப்படுத்தும் நோக்கத்துடன் இதைப் பிரதமர் தூய்மையான நிலையில் செய்துமுடித்துள்ளார். தேசிய ஒற்றுமை இன்றி இந்நாடு முன்னேற்றமடையவும் முடியாது.

‘‘மக்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளைக் கனம் பண்ண தேசிய அரசாங்கம் விரும்புகிறது. தேசிய அரசாங்கம் மக்களை ஏமாற்ற மாட்டாது. அரசாங்கம் வாக்குறுதிகளைக் கொடுத்து அவற்றைக காப்பாற்றியிருக்கிறது என்ற உண்மை கடந்த ஆண்டு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. கடந்த பத்து ஆண்டு காலத்தில் நாம் இதைக் காண முடியவில்லை. அடுத்த பொதுத் தேர்தலில் என்றுமே கண் வைத்திருக்காக ஒரு பெரிய மனிதர் நமது பிரதமர். அவர் தாம் கூறுவதை நடைமுறையில் காட்டுவதுடன், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுபவர்.

#### வாழ்க்கைச் செலவு

வாழ்க்கைச் செலவைப் பொறுத்த வரையில் குறிப்பிடக்கூடியளவு அதிகரித்திருக்கிறது, இதையிட்டு மக்கள் கவலையடைந்திருக்கிறார்கள். இப்பிரச்சினை அரசாங்கத்தையே அழித்துவிடுமென்பதை உணர்ந்த பிரதமர் மிகத் துணிச்சலான நடவடிக்கை எடுத்திருக்கிறார். இது ஒரு மிதவாதப் போக்கு என மக்கள் எண்ணினர் அத்துடன் மக்களுக்கு எதிரான போக்கும் கூட. ஆனால் மக்களுக்குத் தெரியும் பிரதமர் என்றும் தங்களின் அதி உயர்ந்த நன்மைக்காக செயல்படக்கூடியவர் என்று. காரணம் அவர் ஒரு கொள்கைவாதி, மனச்சாட்சி உடையவர், நேர்மையின் வழி செயற்படுபவர். அவர் கூறினர்’ ‘‘அவசியம் ஏற்பட்டால் இந்நாட்டின் நன்மைக்காக சில தியாகம் செய்யும் வண்ணமும் மக்களைக் கேட்டு அதற்காக நடவடிக்கைகளையும் எடும்பேன்’’ என்று.

ஆர். எல். ஏ. ஐ. கரன்னகொடை! ‘‘ஒரு உயர்ந்த மனிதர்.

சு. நடராசா! நிச்சயமாக, அவர் ஒரு உயர்ந்த மனிதரேதான். எதிர் வரிசையில் உள்ள நண்பர் இதைக் கூறுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், உண்மையிலேயே அவர் ஒரு பெரிய மனிதர், இந்த நாட்டின் அதி உயர்ந்த பிரதமரும் கூட.

ஆர். எல். ஏ. ஐ. கரன்னகோடை: நான் உங்களையே குறிப்பிட்டேன், பிரதமரையல்ல.

சு. நடராசா! மிக்க நன்றி. எதிர் வரிசையில் உள்ள நண்பர் என்னை உயர்ந்த மனிதர் என்று கூறினல், நான்சொல்லுகிறேன் பிரதமர் எவரையும் விட உயர்ந்த மனிதர் என்று.

#### சட்டம் புனிதமானது

‘‘இந்த நாட்டுச் சந்தையைக் கட்டுப்படுத்தும் வியாபாரிகளுக்கு எதிராக பிரதமர் சில நடவடிக்கைகளை எடுத்த நேரத்தில் அவர் செல்வாக்கற்றவராக்கப் படலாம் என்றும் இந்நடவடிக்கைகள் அரசாங்கத்தை தடைப்படுத்தும் என்றும் அதற்கு எதிராக மக்கள் எழுவார்கள் என்றும் நம்பப்பட்டது. இன்று நாம் கண்டது என்ன? இந்நாட்டில் என்ன நடக்கிறது? நல்லெண்ணமும் அமைதியும் நிலவுகிறது. இது எல்லா மக்களுக்கும் நன்மை கொடுக்கக் கூடிய நடவடிக்கை என்பதை மக்கள் உணர்ந்திருப்பதுடன், இச் சமூகத்தின் அங்கமானவர்களான வியாபாரிகளுக்கும் இது நல்லதே என்பதுடன் அவர்களும் சில தியாகங்களைச் செய்யத் தயார் என்பதைக் காட்டி விட்டார்கள்.

‘‘இந்த நாட்டில் நல்லொழுக்கம் ஏற்படுவதே அடுத்து நமக்கு வேண்டியது. ஒரு சில அரசியல் கோஷ்டியினரின் நடவடிக்கைகளைத் தவிர இந்த நாட்டில் நல்லொழுக்கத்தைக் காப்பாற்ற முடியும் என்பதைக் கடந்த ஆண்டு நிரூபித்துவிட்டது. அந்த அரசியல் கோஷ்டியினரின் முயற்சிகளை பிரதமர் கவனித்து முறியடித்ததுடன், பொது மக்களின் உரிமைகளிலும் உடமைகளிலும் கைவைக்க முடியாத படியும் தடுத்திருக்கிறார்.

‘நாம்சட்டத்தையும் ஒழுங்கையும் மரியாதை செய்ய வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய சட்டங்களுக்கு மரியாதை செய்வதுடன் அவற்றை உயர்ந்தவையாக மட்டுமல்லாது புனிதமானதாகவும் நாம் கருதவேண்டும்.

#### இரண்டு தேவைகள்

‘தமிழ்பேசும் மக்கள் கவனம் செலுத்தும் இரண்டு விடயங்கள் அரியணையுரையில் உள்ளன. ஒன்று காங்கேசன்துறைத் துறைமுகத்தை விஸ்தரிப்பது. அது இந்த ஆண்டுகாலத்தில் நிறைவு பெறும் என்பது அரியணை உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்தது மாவட்ட சபைகளை ஏற்படுத்துவது. இது தமிழ்பேசும் மக்களுக்கு மட்டுமல்ல நாடு முழுவதையும் உள்ளடக்கியதாகும். நாடு பூராவிலும் மாவட்ட சபைகளை அமைக்கும் என்று எமது அரசாங்கம்வாக்குறுதி அளித்துள்ளது. இதன்மூலம் அதிகாரங்கள் பரவலாக்கப் படுவதுடன் மக்களும் தங்கள் தங்கள் மாவட்டங்களை அதிக அதிகாரங்களுடன் நிர்வாகிக்கமுடியும்.

‘கடந்த ஆண்டில் தேசிய அரசாங்கம் எதை எதையைச் செய்ய முடிந்தது என்பது அரியணை உரையில் விவரிக்கப்பட்டுள்ளது. நிறைந்த பொறுப்புக்களுடனும், குறிக்கப்பட்ட கடமைகளுடனும், நாட்டுமக்களுக்கு தொண்டாற்ற தேசிய அரசாங்கம் ஆட்சப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அதன்பின்னர் மக்களின் அன்பை முழுதாகக் கவர்ந்துள்ளோம். முன்னர் இந்த நாட்டில் நிலவி, கடந்த பத்தாண்டு காலமாக இல்லாதுபோன தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தியதே பிரதமரின் மிகப் பெரிய சாதனையாகும். மீண்டும் இந்நாட்டுமக்களிடையேயும், இனங்களிடையேயும் ஒற்றுமை பலப்பட்டுள்ளதை நாம் இன்று பார்க்க முடிகிறது.

#### புனர்வாழ்வு

‘உள்நாட்டுதொழில்துறையைப் பாதிக்காத முறையில் வெளிநாட்டுத் தொழிலுக்கு இடமேற்படுத்துவது, விவசாயத்தைப் பெருக்குவது, அதிகப்படியான ஆணைக் குழுக்களை நியமிப்பது போன்ற பல புதிய துறைகளுக்கு அரியணையுரையில் இடமிருக்கிறது இந்த நடவடிக்கைகளின் மூலம் முன்னைய அரசாங்கம் நாட்டைப் பொருளாதார படுகுழியில் விட்ட நிலையிலிருந்து திருப்பிச் செய்வதற்கு தேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. நாம் பொருளாதார முன்னேற்றத்தினதும், மக்களின் மகிழ்ச்சிக்கான பாதையிலும் நின்றுகொண்டிருக்கிறோம்.

‘அடுத்த ஆண்டும் நமது சாதனைகளைக்கூறவும் அடுத்த ஆண்டுகளுக்கான திட்டங்களைக் கூறவும் நமது பிரதமரை பலமான மனிதராகவும் திடகாத்திரமுள்ளவராகவும் வைத்திருக்கும் வண்ணம் இறைவனைகேட்டுக் கொள்கிறேன்.’

## என்ன உறவோ?

இலங்கை மத்திய வங்கி சிங்களத்தீவிரவாதிகளின் வேட்டைக்காடாகவும், அரசாங்க எதிர்ப்பாளர்களின் நிலைக்களனுகவும் தான் இதுவரை இருந்து வருவதாகப் பலரும அறிந்திருந்தார்கள். இப்பொழுது இந்த வங்கியில் பல அருவருப்பான காதல் விளையாட்டுக்கள் நடைபெறுவதாகவும் நமது நிருபர் தெரிவித்திருக்கிறார். ஒரு பகுதியின் பொறுப்பான சிங்கள அதிகாரி (மணமுடித்தவர்) அப்பகுதியில் கடமையாற்றும் தமிழ்க் குமாரி ஒருவருடன் அலுவலகத்திலேயே காதல் சேஷ்டைகள் புரிகிறாராம். இதனல் வங்கியில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் குறிப்பாகத் தமிழ்ப்பெண்கள பெரிதும் மனவருத்தம் அடைந்திருப்பதுடன், தாம் தலை நிமிர்ந்து வாழ முடியவில்லையே என்றும் தெரிவித்திருக்கிறார்களாம்.

ஜீ. சீ. ஈ.
(சா. த.)
ஆசிரியர் கலாசாலைப் பிரவேச பரீட்சை
புதுமுறை வினு விடை
பயிற்சிக் கோவைகள்

| | |
|---|---|
| தமிழ் பாஷை | 5-00 |
| எண் கணிதம் | 5-00 |
| பூமி சாஸ்திரம் | 5-00 |
| சரித்திரம் | 5-00 |
| குடியியல் | 5-00 |
| உடலவியல் | 5-00 |
| இஸ்லாம் | 5-00 |
| 101 கட்டுரைகள் | 7-50 |
| பொது அறிவும் பொது விவேகமும் | 5-00 |

சர்வகலாசாலை போதன கழகம்,
540, மருதானை வீதி,
த. பெ. 1079.
கொழும்பு-10.

SATHYALAYAM'S
KASA NASINI
காஸ நாஸினி காச நாசனி

‘‘காச நாசனி’’ எல்லாவிதமான இருமல்களையும், அவை, எவ்வளவு நாள் பட்டதானலும், கடுமையானதானலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச் சளி (ப்ரோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிக சிறந்தது.

‘‘ப்ரதிச்சாய தகோகாஸ: காஸால் ஸம்ஜாயதேக்ஷய’’

என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால் இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தில், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றொரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அளவு: 15 - 25 சொட்டுகள் வீதம் தினம் மூன்று முறை.
விலை: 1 அவு. போ. ரூ. 5/-

எஸ் என் குரு மெடிக்கல் ஹால்
82, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.

# “பண்டாரநாயக்காக்கள் வகுப்புவாதிகள்”

## அவர்கள் கையாண்டது இட்லரின் கொள்கை

## தமிழரசுத் தலைவர் உரை பற்றி சிங்களத் தினசரி

காலஞ் சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட முற்போக்குத் தலைவர்கள் சிங்கள வகுப்புவாதிகள் என்று பிரதமர் டட்லி சேனநாயக்காவும் கலந்து கொண்ட கல்முனைத் தமிழரசுக் கட்சி மாநாட்டில் தலைவர் டாக்டர் ஈ. எம். பி. நாகநாதன் தமது தலைமையுரையில் கூறியுள்ளார். இவ்வாறு “பண்டாரநாயக்கா தம்பதிகளுக்குத் தமிழரசுக் குற்றச்சாட்டு” என்ற தலைப்பின் கீழ் ஜனதின 7-7-66 ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனதின மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

“காலஞ் சென்ற பண்டாரநாயக்கா, முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரின் ஆட்சிகாலத்தில் அவர்கள் இட்லரின் கொள்கையைக் கையாண்டதாக அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

“இன்றைய நிலைமை அப்படியல்ல என்றும் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை நிறுவிய திரு. டட்லி சேனநாயக்கா மிகவும் நியாயமானவரென்றும், அவரது சகாவான திரு. ஜே. ஆர். ஜயவர்தன தமிழரசு வாதிகளின் மிக நெருங்கிய நண்பரென்பதை நிரூபித்திருக்கிறாரென்றும் அவர் கூறினார்.

“பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவர்கள் கவனமாக இருக்க வேண்டுமென்றும், அவர்கள் தலை தூக்காமலிருப்பதற்காக செய்யப்பட வேண்டியதெல்லாம் செய்யப்படுமென்றும் அவர் தமது உரையில் எச்சரித்திருக்கிறார்.

“அரசாங்கத்துக்குநிவட்டி (பந்தம்) பிடிக்காத எல்லா அதிகாரிகளையும் விரட்டிவிட வேண்டுமென்றும், அது மட்டுமின்றி அவர்களுக்குச் சிறைத்தண்டனை கொடுக்கவோ மரண தண்டனை கொடுக்கவோ பின் வாங்கக் கூடாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்”

## சிங்கள இதழ்களில்...

## கள்ளக் குடியேற்றம் அரசாங்கம் சட்டங்களை தளர்த்தி விட்டதாம்

‘வட, கிழக்கு கரைகளில் வந்திறங்கும் கள்ளக் குடியேற்றக் காரர்களைக் கைது செய்வதற்கான சட்டங்களை யு. என். பி. — தமிழரசு அரசாங்கம் தளர்த்தியுள்ளது’ என்று ஜனதின 12-7-66 ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

“கள்ளக் குடியேற்றக் காரர்களைக் கொண்டு வரும் தரகர்களுக்கு வட, கிழக்குப் பகுதிகளில் உயர்தர அதிகாரிகளின் பாதுகாப்பு எப்பொழுதும் கிடைத்து வருகிறது. இதனால், கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதற்காக அந்தப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர்,

கள்ளக்குடியேற்றக் காரர்களைக் கொண்டு வரும் தோணிகளைக் கடலில் மூன்று மைல் வரை துரத்திச் சென்று பிடிப்பதற்கு முன்னால் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களின் கீழ் இடமிருந்ததெனினும், இப்பொழுது, கடலில் ஒரு காலும் கரையில் ஒரு காலும் ஊன்றிநிற்கும் கள்ளக்குடியேற்றக் காரர்களைக் கூட கைது செய்ய சட்டத்தில் இடமில்லை என்று மன்னார் பகுதியிலுள்ள இராணுவத்தினர் நமது நிருபரிடம் கூறினர்.

இவ்வாறு கஷ்டப்பட்டு ஒரு கள்ளக் குடியேற்றக் காரரைக் கைது செய்தாலும் அவரை முன்போல் போலிசாரிடம் ஒப்படைக்க முடியாது. அவரை கிராமசேவகரிடம் தான் ஒப்புக்கொடுக்க வேண்டும். அது தான் புதிய உத்தரவு. இதனால் கள்ளக் குடியேற்றக் காரர்கள் சுலபமாகத் தப்பிச் செல்ல முடியும்.

தரகர்களிடம் இலஞ்சம் வாங்கும், கிராமசேவகர்கள் பிடித்துக் கொடுக்கப்படும் கள்ளக்குடியேற்றக் காரர்களை இந்நாட்டுப் பிரசைகளென்று அறிக்கை சமர்ப்பித்து விடுகின்றனர்.

அத்துடன் தரகர்கள் உயர்தர அதிகாரிகளுடன் நெருங்கிப் பழகுவதால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியாமலிருக்கிறது.

இத்தகைய ஒரு தரகரை இராணுவத்தினர் தாக்கியதாகப் புகார் செய்யப்பட்டு, தாக்கியவரை அடையாளம் கண்டுபிடிப்பதற்காக அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதெனினும் தாக்கியவராகக் கூறப்படுபவரை அடையாளம் காட்ட முடியவில்லை ஆகவே அணிவகுப்பில் பங்கு பற்றிய சுமார் 200 இராணுவத்தினர் மீண்டும் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் என்று அவர்கள் தெரிவித்தனர்”

### சிங்களத்துக்கு இடமில்லையாம்

“வவுனியாவில் சிங்களத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்த அந்தஸ்து ஜனவரி 8 ந் திகதிக்குப் பின்னர் பூரணமாக அகற்றப்பட்டதுடன், கச்சேரி தொட்டு கிராமசேவகர் வரை எல்லா அரசாங்க அலுவல்களும் தமிழில் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

“வவுனியாக் கச்சேரிக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த வவுனியா கச்சேரி’ என்று சிங்களத்துக்கு முதலிடம் கொடுத்து எழுதப்பட்டிருந்த பெயர்ப் பலகை ஜன. 8 ந் திகதிக்குப் பின்னர் தமிழுக்கு முதலிடம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது. அங்கு அரசாங்க திணைக்களங்களில் கடமையாற்றிய சிங்கள அதிகாரிகள் அனைவரும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு, அந்த இடங்கள் தமிழ் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.”

— எத்த (12-7-66)

### தங்கவேலுக்கு கம்பளையில் தோட்டம்

‘ஏழுகட்சி கூட்டரசாங்கம் ஏற்பட்டபின்னர் இலங்கையை விளையாட்டுப் பூமியாக்கிக்கொண்டிருக்கும் ‘தி. மு. க.’ நடிக நடிகையர் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக இலங்கையைப் பிடித்துக்கொள்வதற்கும் தயாராகிறார்களென்பது அவர்களின் கூற்றிலிருந்தே தெரிகிறது.

இலங்கையில்கலாசாரவிழாக்களில் ஈடுபடப்போவதாக ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு இங்கு வந்த மூன்றுவது நடிகர் கோஷ்டியின் தலைவர் தங்கவேலு கம்பளையில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் பேசுகையில் கம்பளையில் தான் ஒரு நல்ல தேயிலைத் தோட்டத்தை விலைக்குவாங்க எண்ணியிருப்பதாகக் கூறியுள்ளார். உதவி மந்திரி திரு. எல். பி. தலநாயக்கா முன்னிலையிற்றான் அவ்வாறு கூறினார். இன்னும் 6 மாதங்களில் மறுபடியும் இலங்கைக்கு வருவதாகவும் கூறினார்.’

ஜனதின (1-7-66).

### ஆங்கிலமும் தமிழும்

“உத்தியோக மொழி திணைக்களத்தில் மொழி அமுலின் முன்னேற்றத்தைக் கவனிக்கும் பகுதி இப்பொழுது செயலற்றுப் போய் விட்டது” என்று தவச (7-7-66) ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

“அரசகரும மொழிச்சட்டத்தின் 33வது பிரிவின்படி உத்தியோக பூர்வமான ஒவ்வொரு கடிதமும் அரசகரும மொழியில் எழுதப்பட வேண்டும். இச்சட்டத்தைச் சட்டை செய்யாமல் இப்போதெல்லாம் திணைக்களங்களுக்கும், அமைச்சுகளுக்கிடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்துகள் ஆங்கிலத்திலும் வட, கிழக்கு மாகாணங்களில் உத்தியோக பூர்வமான கடிதங்கள் தமிழிலும் எழுதுவதாற்றான் மேற்கண்ட நிலை உருவாகியுள்ளது”

### மகா சங்க முடிவு

“அடுத்த ஆகஸ்டுக்கு முன்பு பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் நடத்தும்படி திரு. டட்லி சேனநாயக்காவை வற்புறுத்துவதென்று மல்வத்தை விபஸ்சி மாநாயக்க தேரோ தலைமையில் நடைபெற்ற ஒரு மகா சங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக் கூட்டம் மல்வத்த மாநாயக்க தேரோவின் உத்தியோக பூர்வமான இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய வண. மாலேவன ஞானிச்சர நாயக்க தேரோ, இப்பொழுது ஜே. ஆர் கூச்சலிட்டதற்கு அவரிடம் அதிகாரம் கிடையாதென்றும், எல்லா அதிகாரங்களையும் பிரதமர் தனது கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் கூறினார்.

வண. தேவமொட்டாவ அமரவன்க தேரோ பேசுகையில் தான் இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த நாடுமுழுவதும் சென்று பிரசாரம் செய்தது ஏழு கட்சிகளின் கூட்டாட்சியை அமைக்கவோ, இரு பிரதமர்களை நியமனம் செய்யவோ அல்லவென்றும், பொது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதிருப்பதால் தனக்குப் பொது மக்களிடம் செல்ல முடியாதிருப்பதாகவும் கூறினார்.

“இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து கரையேறுவதற்காக அரசாங்கத்தைக் கலைத்துவிடுமாறு திரு. டட்லி சேனநாயக்காவை வற்புறுத்த வேண்டுமென்றார் மல்வத்தை மாநாயக்க தேரோ.”

— ஜனதின (5-7-6[illegible])




தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள்

பயங்கரமான கிருமிகள் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கியிருந்து நோய்களைத்தொற்றலைத்துப் பரப்புகின்றன.

இந்தத்தீங்கிழைக்கும் கிருமிகளினின்று உங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற உங்கள் வீட்டில் நம்பிக்கை வாய்ந்த ஒரு தொற்றுநாசினி தேவை.

டெற்றேல்— உலகின் அதி நம்பிக்கை வாய்ந்த தொற்று நாசினி—உங்கள் குடும்பத்தை எப்போதும் காப்பாற்றும்.

டெற்றேல்- வெட்டுக்காயம், கிறற்புண் முதலியனவற்றைத் தொற்றுக் கிருமிகளிலிருந்து காப்பாற்றும்.

டெற்றேல்- தொண்டைப்புண்ணைத் தடுக்கவும் குணமாக்கவும் உதவும்.

டெற்றேல்- மாதரின் பிரத்தியேக சுகாதாரத்துக்கு மிகவும் உகந்தது; ஏனெனில் டெற்றேல் இதமூட்டி, சுத்தம் தருவதோடு, தொற்றுக் கிருமிகளிலிருந்தும் காப்பாற்றும்.

டெற்றேல்- கர்ப்ப காலத்திலும், பின்னரும் குழந்தையையும் தாயையும் காப்பாற்றுகிறது.

எப்போதும் வீட்டில் ஒரு போத்தல் டெற்றேல் வைத்திருங்கள்.

டெற்றேல் உபயோகிக்குமுன் எப்போதும் நீர் கலந்து கொள்ள வேண்டும்.

உலகின் அதி நம்பிக்கைவாய்ந்த தொற்று நாசினியான டெற்றேலை உலகெங்குமுள்ள டாக்டர்கள் உபயோகிக்கிறார்கள்.

டெற்றேல்

# இந்திய தேர்தற்களம்

நமது
சென்னை நிருபர்

உலகின் மிகப் பெரிய சனநாயக நாடான இந்தியா அடுத்த பொதுத் தேர்தலுக்குத் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் எட்டு மாதங்கள் இருந்த போதிலும் நாட்டில் தேர்தல் உணர்வுகளை கட்டி விட்டது. அரசியற் கட்சிகள் தேர்தற் சிறப்பு மாநாடுகளை ஆங்காங்கே நடாத்தத் தொடங்கி விட்டன. அரசியற் கட்சிகளின் பெருந் தலைவர்கள் எல்லாம் தமது கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில கட்சிகள் வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்து விட்டன. ஆனால் அவற்றை வெளியிட அக் கட்சிகள் அஞ்சுகின்றன. முன்னதாகவே வேட்பாளர்களின் பெயரை வெளியிட்டால் மாற்றுக் கட்சிக் காரர்கள் ஏதாவது ஒரு வழியில் லாபம் சம்பாதித்து விடுவார்கள் என்பதே இந்த அச்சத்திற்குக் காரணம்.

ஆளும் கட்சியான அகில இந்திய காங்கிரஸ் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் கோட்டை விட்ட தொகுதிகளில் (அகில இந்திய ரீதியில்) இம் முறை யார் யாரை வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்பதை முடிவு செய்து விட்டதாம். இந்த வேட்பாளர் பட்டியலை கடந்த வாரம் காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜ் அவர்களும் பரிசிலனை செய்து முடித்து விட்டாராம். என்றாலும் இப்பட்டியல் இப்போதைக்கு வெளியிடப் பட மாட்டாது என்று நம்பப்படுகிறது.

### காங்கிரஸ் தலைவரின் நிலை

காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்களின் கவனம் வட இந்தியாவிலும் பார்க்க தென்னிந்தியாவிலேயே அதிகமாக இருக்கும் என்று பலரும் நம்புகிறார்கள். பிரதமர் தேர்தலை முடித்துக் கொண்டு தில்லி நகரில் இருந்து புறப்பட்ட திரு. காமராஜ் அதற்குப் பின்னர் தொடர்ச்சியாக ஒரு வார காலங்கட் தில்லியில் தங்கவில்லை. முக்கிய விடயங்ள் ஏதாவது இருந்தால் மட்டுமே அவர் தில்லி சென்று வருகிறார். அவரின் முழுக் கவனமும் கேரளத்திலும் தமிழ் நாட்டிலுமே இருக்கிறது.

### தலைமைப்பதவிக்கு ஆபத்து

திரு. காமராஜ் தெற்கில் முகாமிட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன. 1. பிரதமர் தேர்தலின் போது திரு. காமராஜ் நடந்து கொண்ட சர்வாதிகாரப் போக்கினால் வட நாட்டுத் தலைவர்களுக்கு அவர் மீது வெறுப்பு ஏற்பட்டு விட்டதாம். இதனால் அவர் வட நாட்டு தலைவர்களை அடிக்கடி நேரில் சந்திக்க கூச்சப் படுகிறாராம்.

2. தென்னாட்டில் காங்கிரஸ் ஆட்டங் கெண்டிருக்கிறது. கேரளத்தில் காங்கிரஸ் பல தடவைகள் தோற்று விட்டது. இம் முறையும் காங்கிரஸ் கேரள நிர்வாகத்தைக் கோட்டை விட்டு விட்டால் அது தென்னாட்டுத் தலைவரான திரு. காமராஜ் அவர்களுக்கு ஒரு வடுவாகும். இதற்கும் மேலாக தமிழ் நாட்டு அரசியல் நிலை, எதற்கும் கலங்காத திரு. காமராஜ் அவர்களைப் பெரிதும் கலக்கி வருகிறது. தமிழ் நாட்டின் இன்றைய அரசியல் நிலை எதிர் கட்சிகளுக்கே சாதகமாக இருக்கிறது என்பதை திரு. காமராஜ் அவர்களும் பல சந்தர்ப்பங்களில் மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். தமிழ் நாட்டு ஆட்சிப் பொறுப்பையும் எதிர்க் கட்சிகளின் கையில் கொடுத்து விட்டால் அது திரு, காமராஜின் வாழ்வில் மறைக்க முடியாத வடுவாக, நீக்க முடியாத கறையாக அமைவதுடன் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கும் உலை வைத்து வைத்துவிடும்.

### தமிழ் நாட்டிலே தங்குவார்

இக் காரணங்களினால் அடுத்த பொதுத் தேர்தல் முடியும் வரை திரு. காமராஜ் தமிழ் நாட்டிலேயே சுற்றிக் கொண்டு திரியப் போகிறார் என்பது நிச்சயமாகி விட்டது. ஓய்வு கிடைக்கின்ற நேரத்தில் ஓரிரு தடவைகள் வடநாட்டிற்கும் செல்லக் கூடும்.

['இந்திய தேர்தற் களம்" என்னும் இப்பகுதி பாரத நாட்டுத் தேர்தல் முடியும் வரை தொடரும். நமது தமிழ் நாட்டு நிருபர் தவிர வேறு பல நடு நிலை அரசியல் நோக்கர்களும் இப் பகுதியில் தமது கருத்துக்களைத் தெரிவிக்கவிருக்கிறார்கள். இப் பகுதியைத் தொடர்ந்து படித்து வருபவர்கள் பாரத நாட்டுத் தேர்தல் நிலைமையை நேரில் தரிசிப்பது போன்ற உணர்வைப் பெறுவதுடன் தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பதையும் ஓரளவு முன்னதாகவே ஊகிக்க முடியும்.]




மலச் சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு

**ரிஷிலேகியம்**

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி:

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேககாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், குதக சிக்கல், உள்மூலம், வெளிமூலம், இரத்த சீழ்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் பலனடைவர். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

**15 நாள் மருந்து ரூ. 3-50**

**30 நாள் மருந்து ரூ. 6-50**



கேச உதிர்வா? வளர்ச்சியில்லா மிருதுவின்மையா?



உபயோகியுங்கள்!

**ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்**

மேலான மருந்துகள் சேர்ந்த கூந்தல் வளரும் தைலம்

6 அவுன்ஸ் பாட்டில் 1க்கு ரூபா 3-00
12 அவுன்ஸ் பாட்டில் 1க்கு ரூபா 5-75
தபால் செலவு ரூபா 1/05 : கேட்லாக் இலவசம்

ஞான சுந்தர வைத்திய சாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு

ரிஷி நேத்திர சஞ்சீவியின் புதிய விலை:

**6 அவுன்ஸ் பாட்டல் 3-50**

**12 „ „ 6-50**


நடக்கவிருப்பவை

## வானொலியில் பேசுகிறார்



இத் திங்கள் 22-ம் நாள் வெள்ளிக்கிழமை இரவு 9-15 மணி முதல் 9-30 மணி வரை இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கை வானொலியில் உரை நிகழ்த்தவிருக்கிறார். அறிஞர் பெர்னாட் ஷாவின் 110-வது ஆண்டு நிறைவையொட்டி இலங்கை வானொலி நடத்தவிருக்கும் சிறப்பு ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாக திரு. அமிர்தலிங்கம் அவர்களின் உரையும் இடம் பெறுகிறது.

திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் முழு நேர அரசியல் வாதியாக இருந்த போதிலும் தமிழ் ஆங்கில இலக்கியங்களிலும் நிறைந்த ஈடுபாடுடையவர் என்பது பலரும் அறிந்ததே. சர்வகலாசாலை வாழ்க்கையின் போது பெர்னாட்ஷாவின் நாடகங்கள் பற்றி ஆங்காங்கே பல உரைகளை திரு. அமிர்தலிங்கம் நிகழ்த்தியிருக்கிறார்.

## இ. த. அ. க. கல்முனைக் கிளை பதவியாளர்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி கல்முனைக் கிளையின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டம், சென்ற மாதம் 26ந் திகதி வியாழக் கிழமை கிளைப்பணிமனையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரும்பாலான உறுப்பினர்களும் அன்பர்களும் வரவு தந்திருந்தனர்.

புது வருட நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்:—

காப்பாளர்கள்:- திருவாளர்கள்; பொ. வி, கந்தையா, லலோர் டி சில்வா, கு. சிவப்பிரகாசம், அ. பிள்ளை, க. சிவசுந்தரம், எம். முருகுப்பிள்ளை, தலைவர்:- திரு. கு. ஏகாம்பரம், உப தலைவர்கள்:- திரு. சொ. சாமிஜாத்தேவர், செல்வன், ஞா. இராசநாயகம், செயலாளன்:- செல்வன், நோ. மணிவாசகன், துணைச் செயலாளன்:- கா. சின்னத்துரை, பெருளாளார்:- செல்வன், க. இராஜசுந்தரம், உப பொருளாளர்:- திரு. மு. முத்துலிங்கம், நிர்வாகசபை உறுப்பினர்களாக:- திரு. நா. மயில்வாகனம், திரு. நா. கணபதிப்பிள்ளை, செல்வன், ப. தில்லையம்பலம், செல்வன் கி. பாக்கியராசா, திரு. வி. தங்கராசா, திரு. க; வேலுப்பிள்ளை, திரு. க. சின்னத்தம்பி, செல்வன். என். பூபாலரெட்டினம், திரு. ஏ. எஸ். தம்பி, திரு. வி. மார்க்கண்டு, செல்வன், எஸ். கனகரெட்ணம், க. வேல்முருகு ஆகியோராவர்.

## புதிய சமாதான நீதவான்

பொது நலப்பிரியரும் சிறந்த சமூக சமய சேவகரும் கொழும்பு லீலாஸ்டோர்ஸ் நியூ லீலா அச்சகம் ஆகியவற்றின் உரிமையாளருமான திரு. ச. த. சின்னத்துரை கொழும்பு மாவட்டத்துக்கு சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

10ந் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு பிரதம நீதிபதி திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து சமாதான நீதவான் பதவியை ஏற்றுக் கொண்டார்.

அகில இலங்கை இந்துமாமன்ற முகாமைக் குழு அங்கத்தவராகவும் கொழும்பு கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை உப தலைவராகவும் கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை பால செல்வவினாயக மூர்த்தி



திரு. ச. த. சின்னத்துரை

கோவில் தர்மகர்தாவாகவும் பல வருடங்களாக கடமையாற்றி வருகின்றார் இவர்.

சிங்கள தமிழ் ஐக்கியத்தில் அதிக நம்பிக்கையுள்ள இவர் கொழும்பு புறக் கோட்டை ஐக்கிய போதிராஜசமித்திய எனும் பௌத்த சங்கத்தில் தனாதிகாரியாகவும் தமிழ் சிங்கள புத்தகப் பதிப்பாளராகவும் திகழ்ந்து தமிழ் சிங்கள மக்களிடையே நன் மதிப்பைப்பெற்றவர்.

இலங்கைப் புகைப்படச் சங்கம் கொழும்பிலும் கண்டியிலும், காலியிலும் நடாத்திய புகைப்படக் கண்காட்சியில் சிங்கள இலக்கியவளர்ச்சிக்கு பாடுபட்ட சிங்கள அறிஞர்களின் புகைப்படங்களின் மத்தியில் இவரது புகைப்படத்தையும் வைத்து கௌரவமளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

வர்த்தகத்தில் மாத்திரமன்றி கைத் தொழிலிலும் ஆர்வங் கொண்ட இவர் மினுவாங்கொடை பிரிலங்கா இன்டஸ்ரிஸ் பங்காளராகவுமிருக்கிறார்.

இவர் காங்கேசன்துறை அமெரிக்கமிஷன் ஆங்கில பாடசாலையில் கல்விபயின்றவர்.

கடந்த 45 வருடங்களாக கொழும்பிலே வசித்தாலும் தனது தொடர்பை மறக்காமல் காங்கேசன்துறை தெல்லிப்பளையிலும் சமூக சமய பணிகளில் பங்குபற்றி வருகிறார். காங்கேசன்துறை பரஸ்பர நன்மை விருத்திச் சங்கத்தின் தலைவராக பல காலம் சேவையாற்றினார். காங்கேசன்துறையில் நிகழும் பல சமூக சமய பணிகளிலும் இவர் ஆர்வமுடன் பங்குபற்றி வருகிறார்.

தமிழ் கலண்டர் வெளியீட்டில், சமய, சமூக அறிவியல், பெரியார்களின் சித்திரங்களும் வரலாறுகளையும்புகுத்தி இலங்கையிலும் இந்தியாவிலும் இத்துறையில் மிகவும் பிரபல்யமடைந்தவர் இவர்.

# நாட்டை நிர்மாணிப்போம் வாரீர்!

## தமிழ் பேசும் மக்களுக்கு டாக்டர் நாகநாதன் அறை கூவல்

‘நாட்டு நிர்மாணம் என்பது மனித நோக்கத்தையும் குணுதிசயத்தையும் நிர்மாணிப்பதேயாகும். கடந்த பல ஆண்டுகாலமாக எதிர்காலத்தைப்பற்றிப் பயந்துகொண்டிருந்த தமிழ்பேசும் மக்களுக்கு புத்துயிரளித்து உயர்ந்தவர்களாயும் பெரியவர்களாயும் அவர்கள் ஆக்கப்படவேண்டியது இன்று மிக அவசியமானது. எனவே எமது தாய்நாட்டை நிர்மாணிக்கும் பெரும் பணியில் எம்மோடு ஒன்றிணைந்து வரும்படி தமிழ் பேசும் மக்களை அறைகூவி அழைக்கின்றேன்.’ இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் 10-வது தேசிய மாநாட்டில் தலைமையுரையாற்றிய டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தமது பேச்சின் இறுதியில் குறிப்பிட்டார்.

கடந்த இரு வாரங்களாக டாக்டர் நாகநாதனின் தலைமைப் பேருரையின் முதல் இருபகுதிகள் பிரசுரிக்கப்பட்டன. இறுதிப் பகுதி இங்கு இடம் பெறுகிறது.

‘இறுதியாகத் தமிழ்பேசும் மக்களுக்குஓர்செய்தி. ஆரம்ப உயர்தர பாடசாலைகளிலும் அடிப்படை உயர்தர தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்திலும் எமது குழந்தைகளின் கல்விபற்றி இன்னும் இறுதியாக முடிவெடுக்கப்படவில்லை. இவ்விடயமாக எமது கல்விமான்களும் சிந்தனையாளர்களும் ஆழ்ந்து அலசிப் படித்துத் திட்டம் வகுக்க வேண்டும். இலங்கையிலுள்ள குழந்தைகளனைவரினதும் தொழில் நுட்பக் கல்விபற்றியும் இன்னும் முடிவாக்கப் படவில்லை. மாணவர்களும் அவர்களுக்கு வளர்ச்சியூட்டிய பிரதேசம் பயனடையக் கூடியதாகவும் அவ்வப்பகுதிகளை அபிவிருத்தி செய்ய இம் மாணவர்களை எதிர்பார்த்து நிற்கும் நாடு வளர்ச்சி பெறுவதற்காகவும் தொழில் நுட்பக் கல்வி பிராந்தியவாரியாக்கப்படவேண்டும்.

‘கல்வி மசோதா என்ற திரைக்குப் பின்னிருந்துஎந்த வகையினதுமான குள்ளத்தனச் சூழ்ச்சிகளினால் தமக்கு தனிச் சலுகையோ அதிகாரமோ தேட முயலும் அற்ப மனிதரின் முயற்சிகளையும் நாம் தீவிரமாக எதிர்த்தே தீருவோம்

### கல்விப்பிரச்சினை

‘தமிழ் குழந்தைகள், குறிப்பாக ஏழு மாகாணங்களிலுமுள்ளவர்கள், பண்டாரநாயக்க சகாப்தத்தில் கல்வி அமைச்சினாலும் திணைக்களத்தினாலும் ‘ஏழை உறவினர்கள்’ போல நடத்தப்பட்டு வந்திருக்கின்றனர். தேசிய அரசாங்கத்தின் கீழும் அதே பழைய அதிகாரிகளைக் கொண்டு கல்வியமைச்சும் கல்வித் திணைக்களமும் அதே நெறியற்ற முறையைப் பின்பற்றி வருகின்றன. நேர்மையும் நியாய மனோபாவமும் கொண்ட திரு. டட்லி சேனநாயகாவும் இதை ஒத்துக் கொண்டிருக்கிறார். இனிமேல் பாரபட்சமும் நீதியின்மையும் காட்டப்படமாட்டாது என்று எமக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிதியின்மை காரணமாக திறமையற்றதும். போவடிபோக்கானதுமான தோட்டப்பாடசாலை முறை இன்னும் நீடிக்கப்போகின்றதென்பது ஒரு துக்கமான உண்மை.

‘எனினும் தோட்டப் பாடசாலைக் கல்வித் தரத்தை தேசிய பாடசாலைகளின் கல்வித் தரத்திற்கு உயர்த்துவதற்கும் பாடசாலையை விடும்வகுப்பை ஐந்தாம்தரத்திலிருந்து எட்டாம் தரத்திற்கு உயர்த்துவதற்கும் ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்படவேண்டுமென்ற எமது திருத்தத்தை அரசாங்கக் கட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

‘மேற்கூறிய நோக்கங்களை முன்னிட்டு ஒரு ‘தோட்டப் பாடசாலைச் சபை’ நிறுவி அதற்கு நியாயமான ஒருவருடாந்த நன்கொடையை வழங்கவும் அப் பாடசாலைகளின் வேலையை மேற்பார்வை செய்வதற்குப் போதிய பரிசோதகர்களை நியமிக்கவும் வேண்டுமென்ற எமது மேலுமொரு ஆலோசனை நிராகரிக்கப்படவில்லை; கவனிக்கப்பட்டிருக்கிறது.

### போதன மொழி

‘போதன மொழி தாய் மொழியாகவேஇருக்கவேண்டும்’ என்றதும் வீட்டிற் பேசப்படும் மொழியே தாய் மொழி என்பதன் வரைவிலக்கணம் என்றதுமான பிரதமரின்விவேகம்நிறைந்த பரிகாரத்தை நாம் போதன மொழி விடயத்தில் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

‘தமிழ்ப் பிள்ளைகளுக்கும் சிங்களப் பிள்ளைகளுக்கும் தாய்மொழியே போதன மொழியாக இருக்கவேண்டும் என்றும் ஏனையோரைப் பொறுத்தவரை போதன மொழி பெற்றோரின் விருப்பத்திற்கே விடப்படவேண்டும் என்றும் தேவை ஏற்படின் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

### பல்கலைக்கழகம்

‘இந்தக் கட்டத்தில் பொருத்தமான ஒரு விடயத்தை இங்கே குறிப்பிட வேண்டும். தொழில் நுட்ப, விஞ்ஞான உட்திறனும் பாரிய கலாச்சார சரித்திரமுங் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கு தமக்கென்ற ஒரு பல்கலைக் கழகம் இருக்க வேண்டும். ஏனைய பெரிய பல்கலைக் கழகங்கள் போல இலங்கையின் ஏனைய பாகங்களில் இருந்தும் உலக நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்விபயில்வது வரவேற்கப்படும். கலாச்சாரத்திற்கும் நவீன விஞ்ஞானத்திற்கும் இடமளிக்காத ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் இலங்கையிலிருக்க முடியாது என்பது எமது ஆழ்ந்த கருத்து. அத்துடன் இந்துமத மெய் விளக்கத் துறைக்கும் நெறி முறைக்கும் கலாச்சாரத்திற்கும் ஒரு பிரிவும் இஸ்லாமிய கலாச்சாரத்துக்கும் போதனைக்கும் இன்னொரு பிரிவும் அமைக்கப்படாத ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் இலங்கையில் இருக்க முடியாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். கிறீத்தவமத பாண்டித்தியத்துக்குகத்தோலிக்க, புரட்டஸ்தாந்த மதக்கல்வி நிறுவனங்கள் ஏற்கனவே போதிய அளவு இருப்பதினால் கிறித்தவமதத்துறைக்கு ஒரு தனிப்பிரிவு தேவையிருக்காது. இறுதியாக, தமிழ் பேசும்மக்களுக்கும் இலங்கை நாட்டிற்கும் பெருநிதியமாய் விளங்கக்கூடிய நடைமுறை வண்ணமும் பண்பாடும் நாட்டுப் பற்றும் தூரநோக்குங் கொண்ட இளைஞர்களை உருவாக்க முடியாத ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகமும் இலங்கையில் இருக்க முடியாது.

### நமது இளைஞர்களுக்கு இடம் வேண்டும்

‘கல்வி விவசாய விருத்தி ஆகியவற்றோடு குடிசைக் கைத்தொழில், சிறு கைத் தொழில் ஏற்பாடுகளோடு தொடர்புடைய எமது அறிஞர்களின் ஒத்துழைப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற முறையில்அவ்வத்துறைகளிற்பயன் படுத்த நான் முயற்சியெடுப்பேன். இவர்களுடன் ஆழ் கடல் மீன் பிடிப் பிரச்சினைகள் உள்நாட்டு நீர் நிலையங்களில் மீன் வளர்த்தல் மீன் பெருக்குதல் ஆகிய துறைகளிலும்விஞ்ஞானிகளினதும் அனுபவசாலிகளினதும் ஆலோசனையைப்பெற முயற்சி எடுப்பேன்.

‘குறிப்பாக, கடந்த பதினேழு வருடங்களாகத்திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினுற் பட்டினிபோடப்பட்ட தமிழ்ப்பிரதேசங்களுக்கும் பொதுவாக நாடனைத்திற்கும் அவசரமாகத் தேவைப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களிலும் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும்ஆலோசனைக் கூறக்கூடிய எமது பயிற்சி பெற்ற இளைஞர்களும் அறிஞர்களும் கொண்ட உப குழுக்களை நிறுவுவதும் எமது கடமையாயிருக்கும்.

### அபிவிருத்தித் திட்டம்

‘எமது அபிவிருத்தித் திட்டம் விவசாயத்தின் மீதிலோ கைத்தொழிலின் மீதோ நிர்மாணிக்கப்படவேண்டும்என்பது பற்றி உயர்தர அதிகாரிகள் திட்டமிடுபவர்கள் கொள்கைவகுப்பவர்கள் ஆகியோரிடையே பெருமளவு விவாதமும் தீர்மானமின்மையும் நிலவுகிறது. அபிவிருத்தித் திட்டங்களில் ஆரம்பக் கற்களாக விவசாயமும் அதோடியைந்த சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும் விளங்கவேண்டுமென்று கூறுவதில் எமக்கு எவ்வித தயக்கமும் இல்லை.

எமது தேசிய பிரச்சினைகள் மூன்று:-

(1) உணவு உடை ஆகியவற்றிற்கு வருடா வருடம் பெருந்தொகைப் பணம் செலவாவதினால் அந்நியச் செலாவணியிலேற்படும் பற்றாக்குறை எமது கைத் தொழில் விஸ்தரிப்பிற்கும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பணம் சேமிப்பதனால் இந்தப் பண விரயத்தை நாம் நிறுத்தவேண்டும்.

(2) அதிகரித்துவரும்வேலையின்மையும் மக்கட் பெருக்கமும், இவ்விரண்டினதும்விளைவாக நாம் இயந்திரசாதனங்களை ஒரு முனைப்பாகப்பாவிக்கும் ஏற்பாடுகளிலும்பார்க்க தொழிலாளர்களை ஒருமுனைப்பாகப் பாவிக்கும் ஏற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதே அவசியமாகிறது.

(3) தகுந்த வகையிற் திட்டமிடப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட விவசாய மீன்பிடித் திட்டங்களுக்கும் அவற்றோடு உடன் செல்லும் சிறிய கைத் தொழில் திட்டங்களுக்கும் கிராமத் திட்டங்களுக்கும் அந்நியத் தொழில் நுட்ப உதவியோ பெருந்தொகை அந்நியச் செலாவணியோ தேவையில்லை. இத்துறையில் எமது அனுபவமும் திறமையுங்கொண்ட ஆலோசகர்களைகொண்டு நாம் விரிவான திட்டமொன்றை உருவாக்கி வருகிறோம். அதை நாம் விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்போம். மூன்று நாலு வருடத்தில் நாட்டுக்குத் தேவையான

(15-ம் பக்கம் பார்க்க)

## ம. பொ. சி. இலங்கை வருகிறார்



சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானக் கிராமணியார் அவர்கள்இத் திங்கள் 29ம் திகதி இலங்கை வரவிருக்கிறார். பதுளை நகரில் நடைபெற விருக்கும் மலையகக்கலை விழாவில் கலந்து கொள்வதற்காகவே சிலம்புச் செல்வர் இங்குவருவதாகத் தெரிகிறது.

ம. பொ. சி. அவர்கள் இலங்கையில் தங்கி நிற்கும் நாட்களில்கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கம்பளை, அட்டன் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வார். இவ்விடங்களில் சிறப்புக் கூட்டங்களை ஒழுங்கு செய்ய விரும்புபவர்கள் பதுளை, 23 பசார் வீதியிலிருக்கும் மலையகக்கலை விழாக்குழுவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமென விழாக்குழுச் செயலாளர் திரு. தமிழ்ச் செல்வன் தெரிவித்திருக்கிறார்.

ம. பொ. சி. அவர்கட்கு கொழும்பில் ஓர் மாபெரும் வரவேற்புக் கொடுப்பதற்கும் பல மன்றங்கள் ஒழுங்கு செய்து வருகின்றன. அவரின் அறுபதாண்டு நிறைவையொட்டி நடைபெறும் இவ் வரவேற்பில் சகல அரசியல் கட்சிப் பிரமுகர்களும் தமிழ் பேசும் அமைச்சர்களும் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

ம. பொ. சி. அவர்கள் கலந்து கொள்ளும் மலையகக் கலைவிழாவினை இத்திங்கள் 30ம் நாள் அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தொடக்கிவைப்பார். இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் தலைமைதாங்குவார்.



சுதந்திரன்
SUTANTIRAN

1966 ஜூலை மாதம் 16-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1188

# புதிய நம்பிக்கை

தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது அரியணை உரை மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளித்துள்ளது. சுபீட்சமான எதிர்காலத்தை மக்கள் எதிர்பார்க்கலாமென்பதற்கு உறுதியளித்திருக்கிறது இந்த உரை.

தொழில்களை வளர்க்கவும், விவசாயத்தைப் பெருக்கவும் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்துள்ளது அரியணை உரை.

விவசாயத்தைப் பெருக்க அரசாங்கம் ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. நமது அன்னிய செலாவணியின் பெரும் பகுதியை உணவுப் பொருட்களே விழுங்கி விடுவதால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி ஏற்கெனவே பெருமளவு பாதிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலைமையை நீக்க விடுவது பொருளாதார விருத்திக்கு குந்தகம் விளைவிக்கும்.

உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் குறைத்தோ, உணவு மான்யத்தைக் குறைத்தோ இந்நிலையைத் தவிர்க்க முடியாது. உள்நாட்டில் உணவுப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதே இதற்கான ஒரே வழி. உணவு உற்பத்தி தன்னிறைவு பெறும் அளவுக்கு உயர்ந்துவிட்டால், அந்து உணவுப் பிரச்சினையை மட்டுமல்ல, மற்றும் பல முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கவும் பேருதவியாக இருக்கும்.

இதனைத் தெளிவாக உணர்ந்திருப்பதால்தான் உணவுப் பொருட்களின் உற்பத்திக்கு முப்படைகளை உபயோகிக்கவும் அரசாங்கம் முன் வந்துள்ளது. மல்லி, மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருள் உற்பத்தியில் அவர்களை முழு மூச்சாக ஈடுபடுத்தலாம். நம் தறிகளுக்குத் தேவைப்படும் நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெருகுவதற்காகப் பருத்தி உற்பத்தியிலும் இராணுவத்தினரை ஈடுபடுத்தலாம். இதனால் நிரபராதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், போன்ற குற்றங்களிலீடுபட அவர்களுக்கு அவகாசம் கிடைக்காதல்லவா?

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், அரியணை உரையில் கண்ட மிக முக்கியமான அம்சங்கள் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதும் மாவட்ட சபைகளை அமைப்பதுமே.

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி வேலைகளை இனிமேலும் தாமதப்படுத்துவது சாத்தியமில்லை. இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதாக அமைச்சர்களும் போதுமான அளவு வாக்குறுதிகளை அளித்திருக்கின்றனர். அதற்கான நிதியை அடுத்து வரும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி உடனடியாக அந்த வேலைகளை ஆரம்பிப்பது அரசாங்கத்தின் கடமை. ஆரம்பித்துவிட்டால் மட்டும் போதாது. அதனை வருடக் கணக்கில் இழுத்துச் செல்லாமல் விரைவில் பூர்த்தி செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

மாவட்ட சபைகள் அடுத்த நிதி வருடத்தில் அமைக்கப்பட்டு விடுமென்றே நம்புகின்றோம். தங்களைத் தாங்களே ஆட்சி புரியும் ஓரளவு சுயாட்சி உரிமை பிராந்திய மக்களுக்கு இதன்மூலம் கிடைக்கும். இதனை நிறைவேற்றுவதற்காகத் தீவிரமாகச் செயலாற்ற வேண்டியது தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பு.

கடந்த 16 மாதங்களில் தேசிய அரசாங்கத்தின் மாபெரும் சாதனை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்திவாரமிட்டதுதான். அந்த அத்திவாரம் தான் தேசிய ஒற்றுமை. இன ஒற்றுமையையும், மத ஒற்றுமையையும் ஏற்படுத்தியதன் மூலமே தேசிய ஐக்கியத்தைக் காண முடிந்தது. அதற்கு உறுதுணையாக இருந்தும், இருப்பதும் தமிழ் மொழி விசேட சட்டவிதிகளே.

ஆனால் இச்சட்ட விதிகள் இன்னும் சரிவர அமுலுக்கு வரவில்லை. இத்தாமதத்தால் பல சிக்கல்கள் ஏற்படும். இக்குறைபாடு அரசாங்கத்துக்கு ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. புதிய ஆண்டில் இச்சட்ட விதிகளைப் பூரணமாக அமுல் நடத்துவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

தனியார் துறை பலப்படுத்தப்படுமென அரியணை உரையில் உறுதியளித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். கள்ளச் சந்தை, ஊழல்கள் முதலியவைகளைத் தெரியப்படவேண்டியது அவசியமெனினும், அந்தப் போர்வையில் ஜவுளி விலைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்ததும், இந்திய வம்சாவழி வர்த்தகர்களுக்கெதிராகப் பிரசாரம் செய்தும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களும், இலீது ஏழைகளின் அரசாங்கமே அன்றி பணக்காரர்களின் அரசாங்கமன்று எனப் பொறுப்புள்ளவர்களே பகிரங்கமாகப் பேசி வந்ததும் தனியார் துறைக்கு மட்டுமின்றி தனியார் சொத்துரிமைக்கே வேட்டுவைக்கக் கூடியதாக அமைந்தன அதனால் மக்கள் ஓரளவு பீதியும் கொண்டனர்,

இப்பொழுது அரியணை உரையில் அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதம் தப்பெண்ணெங்கள் நீங்கி தனியார் துறைக்கு நம்பிக்கை அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

சிறிமா — சாத்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்காக ஒரு மசோதா கொண்டுவரப்படுமென அரியணை உரை கூறுகிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரசாவுரிமைபெறத் தகுதியானவர்களுக்குக் குடியுரிமையை வழங்குவதற்காகச் சட்டம் இயற்ற வேண்டியது அவசியமே.

ஆனால் சிறிமா — சாத்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய வம்சாவளியினரின் விருப்பத்துக்கு மாறாக அவர்களை இந்தியாவுக்குத் திரும்புமாறு நிர்ப்பந்திக்க கூடாது என்று மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

மூதவையில் அரியணை உரை மீது நன்றி தெரிவிக்கும் பிரேரணையைத் தமிழரசு செனட்டர் நடராசா கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைத் தமிழர் ஒருவர் தமிழில் பேசி பிரேரித்தது இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் இதுவே முதற் தடவை நாட்டிலே தேசிய ஆட்சியின் கீழ் தேசிய ஐக்கியமும், இனங்களிடையே சௌஜன்ய உறவும் நிலவுகிறதென்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

தமிழ் பல்கலைக் கழகம் அமைத்தல், குடியரசுப் பிரகடனம், அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குதல் முதலியவை அரியணை உரையில் இடம் பெறவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

அரியணை உரையில் குறிப்பிடப்படாத எந்தத் திட்டத்தையும் அமுல் நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு எத்தகைய தடையும் கிடையாதென்பதை அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

# தமிழுக்கு தனிப்பிரிவு வேண்டும்

—o—

# பிரதமர் காட்டிய வழியை மத்திய வங்கியினர் பின்பற்றுவார்களா?

இலங்கை மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டது. இப்பிரச்சினை கடந்த ஓர் ஆண்டுகாலமாக பலருக்கும் தீராத தலைவலியைக் கொடுக்கும்ஒருபெரும் பிரச்சினையாக இருந்துவந்தது. இப்பொழுது பிரதமர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு நீதியான முறையில் பரிகாரம் கண்டிருக்கிறார்.

இப் பெயர்ப் பிரச்சினை ஓர் ஆண்டுக்கு முன்னர் வேண்டுமென்றே இலங்கை மத்திய வங்கி நிர்வாகிகளால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். மத்திய வங்கி நிர்வாகிகளின் ஒருதலைப்பட்சவகுப்புவாதப் போக்கிற்கு ஆட்சிமொழித் திணைக்களமும் பகிரங்கமாகவே துணை நின்றிருக்கிறது.

## அரசியலே காரணம்

'சென்றல் பாங் ஒப் சிலோன்' என்பதற்கு 'இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ் மொழி பெயர்ப்பு என்பதை மத்திய வங்கியும், ஆட்சிமொழித் திணைக்களமும் 1958ம் ஆண்டே ஏற்றுக்கொண்டிருந்தன. ஆனால் கடந்த ஆண்டு சிறிதும் எதிர்பார்க்காத முறையில் மத்தியவங்கி நிர்வாகிகள் 'சென்றல் பாங் ஒப் சிலோன்' என்பதற்கு 'ஸ்ரீலங்கா மகா வங்கி' என்பதே சரியான தமிழ் மொழி பெயர்ப்பு என அறிவித்தனர். வங்கி நிர்வாகிகளின் இத் திடீர் மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், 'ஸ்ரீலங்காமகா வங்கி' என்பது தமிழ் மரபுக்குப் புறம்பானது என்றும் வங்கி மேலிடத்திற்கு வங்கித்தமிழ் ஊழியர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்தது. இதைத் தொடர்ந்து இப் பிரச்சினைக்குள் பலரும் இழுத்துவிடப்பட்டார்கள்.

மத்திய வங்கியில் இப் பெயர்ப் பிரச்சினை எழுந்ததற்கு அரசியல் பின்னணியே காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. கூட்டரசாங்க ஆதரவாளர்களான வங்கி உயர்மட்ட அதிகாரிகள் தேசியஅரசாங்கத்திற்கு பிரச்சினையைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இப்பெயர் மாற்றத்தில் இறங்கினார்கள். இவர்களின் கீழறுப்பு வேலைக்கு சிங்கள வகுப்புவாதிகளின் வேட்டைக்காடாகத் திகழ்ந்துவரும் ஆட்சிமொழித் திணைக்களமும் துணைபோனதில் எத்தகைய வியப்புமில்லை.

## மொழித் திணைக்களம்

ஆட்சிமொழித் திணைக்களத்தினரும் பிரச்சினையைப் பத்தி பூர்வமாக நோக்காது தேசிய அரசாங்கத்திற்கு இடர்ப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்குடனேயே இப்பிரச்சினையில் மத்திய வங்கி அதிகாரிகளின் கீழறுப்பு வேலைக்கு உடந்தையாக இருந்தார்கள். ஆட்சிமொழித்திணைக்களம் 1958ம் ஆண்டு வெளியிட்ட ஆட்சிமொழிச் சொற்றொகுதியின் முதற்பாகத்தில் 'சென்றல் பாங் ஒப் சிலோன்' என்பதற்கு 'இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ்மொழி பெயர்ப்பு என பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்த உண்மையை மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கமும் ஏனையவர்களும் சுட்டிக் காட்டியவுடன் ஆட்சிமொழித் திணைக்களம் ஒரு புதிய திருப்பத்தை இப்பிரச்சினைக்கு ஏற்படுத்தியதுடன் வேறு ஒரு பிரச்சினைக்கும்

சுதந்திரன் அரசியல் நிருபர்

உயிர் கொடுத்தது. முன்னர் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் ஆட்சிமொழிச் சொற்களை திணைக்களம் புனராலோசனை செய்வதாகவும் அதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கி என்பது 'ஸ்ரீலங்கா மகா வங்கி' என மாற்றப் பட்டிருப்பதாகவும் மொழித் திணைக்களம் கூறியது.

## நவீன மொழிபெயர்ப்பு

மொழித் திணைக்களத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு எந்த அடிப்படையில் நடைபெறுகிறது என்று கேள்வி எழுந்தது. ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்படுவது நிறுத்தப்பட்டு சிங்களத்திலிருந்து தமிழாக்கம் செய்யும் புது முயற்சி தொடங்கப்பட்டிருப்பதாகவும், அதன் பிரகாரம் சிங்களமொழி ஓசைக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்து மொழிபெயர்ப்பதாகவும் அறியப்பட்டது. மொழித் திணைக்களத்தினரின் இப் புதிய முயற்சியை மொழி வல்லுனர்கள் கிண்டல்செய்யத் தலைப்பட்டார்கள். ஆனால் இப்பிரச்சினை இற்றைவரை முடிவுகாணப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

மொழித் திணைக்களத்தினரின் புதிய மொழிபெயர்ப்பு முயற்சிக்கும் பிரதமர் சம்மதம் கொடுக்கமாட்டார் என்பது மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினையில் அவர் எடுத்துக்கொண்ட முடிவிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இப்பிரச்சினையிலும் பிரதமர் ஒருகால்தலையிடவேண்டிய அவசியத்தை மொழித் திணைக்களத்தினர் ஏற்படுத்தப் போகிறார்களாஎன்பதை நாம் பொறுத்திருந்தேபார்க்கவேண்டும்.

இப்பொழுது மத்திய வங்கிப் பெயர்ப்பிரச்சினைதீர்ந்துவிட்டது. பிரதமரின் பரிகாரம் மத்தியவங்கி நிர்வாக பீடத்திற்கு ஒரு நல்லபடிப்பினையாகும். அதே நேரத்தில் நேர்மை வழி நின்று போராடிய மத்தியவங்கித் தமிழ் ஊழியர் சங்கத்திற்கு இது ஒரு பெரிய வெற்றி. இத்துடன் மத்தியவங்கி சம்பந்தப்பட்ட ஏனைய பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாக நாம் முடிவு கட்டிவிட முடியாது. மேலும் சில மொழி பெயர்ப்புப் பிரச்சினைகளும் நிர்வாகப் பிரச்சினைகளும் அங்கு எஞ்சியிருக்கின்றன. குறிப்பாக 'நியூஸ் புலட்டீன்' என்ற சொல்லுக்கு 'விவரணம்' என்று மத்திய வங்கியினர் தமிழ்ப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இந்த மொழி பெயர்ப்புத் தவறு என்றும் 'செய்தித்திரட்டு' என்பதே சரியான தமிழ் என்றும் மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் நிர்வாகத்தினருக்கு எடுத்துக் கூறியிருக்கிறது. இப் பிரச்சினையைத்தீர்ப்பதற்கும் பிரதமரின் உதவியை எதிர்பார்ப்பது தவறு. வங்கி நிர்வாகத்தினர் பெயர்ப்பிரச்சினையில் பிரதமர் எந்த வழியைப் பின்பற்றினரோ அதே வழியைப் பின்பற்றி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே சிறப்பாகும் என்பதை வங்கி நிர்வாகத்தினருக்கு குறிப்பாக வங்கி ஆளுனருக்கு இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினையில் தமிழரசுத் தந்தை, திரு. கா. பொ. இரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் உட்பட தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் மூதவை உறுப்பினர்களும் கட்சி முக்கியஸ்தர்களும் ஈடுபட்டிருந்தனர் என்பதை நாம் மறுக்க முடியாது. அத்துடன் மூதவை உறுப்பினர் திரு. ஜேசுதாசனும் இப்பிரச்சினையில் கவனம் செலுத்தியிருந்தார். இவர்கள் அனைவரும் பெயர்ப்பிரச்சினை நீதியான முறையில் தீர்க்கப் பட்டு விட்டதே என்று அமைதியாகி விட்டால் நிலைமை வேறு வழியில் மீண்டும் மோசமாகலாம். ஆகவே இது போன்ற மொழி பெயர்ப்புப் பிரச்சினைகள் மத்திய வங்கியில் மட்டுமல்ல வேறு திணைக்களங்களிலும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு இவர்கள் முயற்சிக்க வேண்டும். அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு.

## வரவு - செலவு மதிப்பீடு

மொழித் திணைக்களத்தில் தமிழ்மொழிக்கெனத் தனிப் பிரிவு நிறுவப் படவேண்டும். இப்பிரிவு ஒரு தமிழ் அதிகாரியின் கீழ் இயங்க வேண்டும். சகல தமிழ் மொழி பெயர்ப்புகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும் முடிவு கட்டும் அதிகாரம் இந்த அதிகாரிக்கு வழங்கப்பட வேண்டும். இப்படியொரு திட்டம் ஏற்கனவே இருக்கிறது. தமிழரசுத் தூது குழு ஒன்று பிரதமரையும் நீதி அமைச்சரையும் பேட்டி கண்டு இப்பிரச்சினையையிட்டு விவாதித்ததுடன், தமிழரசாரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருப்பதாக நீதி அமைச்சரும் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆனால், அடுத்த ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீட்டில் மொழித் திணைக்களத்தில் தமிழ்

(9-ம் பக்கம் பார்க்க)

# மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினையில் வெற்றி

## சரியான தமிழ்ப் பதத்தை பிரதமர் ஏற்றுக் கொண்டார்

## தமிழரசுத் தந்தைக்கு கடிதம்

கடந்த ஒரு வருட காலமாக இருந்து வந்த இலங்கை மத்திய வங்கிப் பெயர்ப் பிரச்சினை வங்கித் தமிழ் ஊழியர்களின் விருப்பத்திற்கேற்ப இப்பொழுது தீர்க்கப்பட்டுவிட்டது. பிரதமர் திரு. டட்லி சேனநாயக்க கடந்த வாரம் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கும் இலங்கை மத்திய வங்கி ஆளுனருக்கும் எழுதியுள்ள கடிதத்தில் 'இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ் மொழி பெயர்ப்பு என்பதைத் தாம் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் தெரிவித்துள்ளார். இப் பிரச்சினை திர்க்கப்பட்டு விட்டதால் வங்கியில் தடைபட்டிருந்த ஆண்டறிக்கை மொழி பெயர்ப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன்' வங்கிப் புதிய கட்டிடத்தின் முன் தமிழ்ப் பெயரும் பொறிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

'இலங்கை மத்திய வங்கி என்பதே' சென்றல் வாங் ஒப் சிலோன், என்பதற்குச் சாரியான தமிழ்ப் பதம் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுவிட்டது. கடந்த ஒரு வருடமாக இப் பெயர்ப் பிரச்சினை ஒரு திராத பிரச்சினையாக இருந்து வந்தது. இப்பொழுது பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் இப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கை மத்திய வங்கி ஆளுனருக்கும், தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கும் பிரதமர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் 'இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ்ப் பதம் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மத்திய வங்கிப் புதிய கட்டடம் திறக்கப்பட்ட நாளிலிருந்து அதன் முகப்பில் ஆங்கில, சிங்களப் பெயர்கள் பொறிக்கப் பட்டிருந்தனவே அன்றி தமிழ்ப் பெயர் பொறிக்கப் படவில்லை. இப்பொழுது 'இலங்கை மத்திய வங்கி' என்ற சொற்பதத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதால் மிகவிரைவில் கட்டிட முகப்பில் தமிழ்ப் பெயரும் பெறிக்கப்படலாம் என்று தெரிகிறது. அத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மத்திய வங்கி ஆண்டறிக்கை மொழி பெயர்ப்பும் (தமிழ்) இப்பொழுது ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதாம்.

சென்றல் வாங் ஒப் சிலோன்' என்பதற்கு ,இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ்ப் பதம் என்பதை ஆட்சி மொழித் திணைக்களம் 1956ம் ஆண்டே ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த ஆண்டு மத்திய வங்கி நிர்வாகிகள் 'சென்றல் பாங் ஒப் சிலோன்' என்பதற்குப் சரியான தமிழ்ப் பதம் என்ன என்று ஆட்சி மொழித் திணைக்களத்தினரிடம் விஞவியபொழுது அவர்கள் ஆட்சி மொழிச் சொற்களைப் புனராலோசனை செய்திருப்பாதகக் கூறி 'ஸ்ரீலங்கா மகா வங்கி' என்பதே சரியான பதம் என அறிவித்திருந்தனர். இதை தொடர்ந்து மத்திய வங்கி நிர்வாகிகளும் அச் சொற் பதங்களையே பிரயோகிக்க முற்பட்டனர்.

மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் இதற்கு பலமான ஆட்சேபனை தெரிவித்திருந்தது. அத்துடன் தமிழரசுத்தந்தை திரு. செல்வநாயகம், திரு. கா. பொ. இரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் 'ஸ்ரீ லங்கா மகா வங்கி என்ற மொழிப் பெயர்புத் தவறென பல ஆதாரங்களுடன் மத்திய வங்கி ஆளுனருக்கு எடுத்துக் கூறினுர்கள். மத்திய வங்கி நிர்வாகம் இவர்களின் மறுப்புக்கு செவி மடுக்கமறுத்தது. மத்திய வங்கி நிர்வாகத்தின் அசமந்தப் போக்கைத் தொடர்ந்து இப்பிரச்சினையை பிரதமரினதும், நிதி அமைச்சரினதும் கவனத்திற்கு தமிழரசார் எடுத்துச் சென்றனர். இப் பிரச்சினையையிட்டு இருவாரங்களுக்கு முன்னரும் பிரதமருக்கும் தமிழரசுத் தூதுக் கோஷ்டியினக்கு மிடையில் பெச்சு வார்த்தை நடைபெற்றது. இப் பேச்சு வார்தையின் பின்னர் பிரதமர் மத்திய வங்கி நிர்வாகிகளின் முடிவு தவறு என்றும் 'இலங்கை மத்திய வங்கி' என்பதே சரியான தமிழ் மொழி பெயர்ப்பு என்பதை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தமிழரசுத் தந்தைக்கும் வங்கி ஆளுனருக்கும் எழுதியுள்ளார்.

### "இவர்கள் இப்படித் தான் மன்னிப்பு கேட்பார்கள்"

தேசிய அரசாங்கத்தை ஆதரிப்பதாக கூறும் வடமாகாணத்துத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசியபோது தேசிய அரசாங்கத்திஞல் ஆக்கப்பட்ட தமிழ் மொழி (விசேட) சட்டத்தை 'கன்னு பின்னு' வென்று திட்டித் திர்த்திருக்கிருர். இந்தப் பிரதிநிதி செய்து கொண்ட முன்னேற்பாட்டினுலோ என்னவோ; சகல பத்திரிகைகளும் அவரது பேச்சை இருட்டடிப்பு செய்தன. ஆனல் ஒரேயொரு ஆங்கிலப் பத்திரிகை மட்டும் முன் பக்கத்தில் எட்டுப்பத்தி தலைப்புக் கொடுத்து அவரது பேச்சை பிரசுரித்திருந்தது. தேசிய அரசாங்கத்திலுள்ள உறுப்பினர் ஒருவர் இப்படிப் பேசியது அரசாங்கத்தைச் சேர்ந்த வட்டாரங்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்ததாம். அரசாங்கத்தைச் சேர்ந்த பின் வரிசை எம்பிக்கள் கூட இந்தப் பிரதிநிதியை கண்டிக்கத் தொடங்கி விட்டார்கள், இதன் காரணமாக, அந்த உறுப்பினர் குறித்த ஆங்கிலப் பத்திரிகைக்கு தான் அப்படிப்பேசவில்லை யென்றும் மறுப்பு வெளியிடும்படியும் கேட்டதாகவும், ஆனல் பத்திரிகை ஆசிரியர் அதை எழுத்தில் தரும்படி கேட்டதாகவும் தெரிகிறது. எழுத்தில் கொடுக்க குறித்த பிரதிநிதி முன்வரவில்லையாம்.

பின்வர் பத்திரிகையில் வெளிவந்த தனது பேச்சில், தாக்கப்பட்டிருந்த அமைச்சரை நேரில் போய்க் கண்டு, இப்பிரதிநிதி மன்னிப்புக் கோரியதாகவும், அறியப் படுகிறது. இது பற்றி அமைச்சர் தனது சகா ஒருவருடன் பேசுகையில், 'இவர்கள் இப்படித்தான்; முதலில் ஏதாவது பேசிவிட்டு பின் மன்னிப்புக் கேட்பார்கள், என்று கூறியதாகவும் தெரிகிறது.

### ஜீ. ஜீ. கடிதத்துக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும், பிரதமருடனும் பேச்சு வார்த்தை நடத்தி வந்தது வாசகர்கள் அறிந்ததே. உள்ளூராட்சி அமைச்சர் கனம். மு. திருச்செல்வமும், மந்திரி சபைநிலையிலும், தனிப்பட்ட முறையிலும்,பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்காக வாதாடி வந்துள்ளார். இதற்கிடையில், திரு. பொன்னம்பலம் பாதிக்கப்பட்ட அரசாங்கஊழியருக்காகதானும் வாதாடுவது போல காட்டிக் கொண்டு குறிப்பிட்ட ஊழியர்களுக்கு நியாயம் வழங்கும்படி நிதியமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினுர்.

இதற்கு பதிலளித்த நிதியமைச்சர், 1965ம் ஆண்டு யூன் மாதம் 22ம் திகதியே இதுபற்றி அமைச்சரவையில் தமிழ்பேசும் மக்களின் ஒரே பிரதிநிதியாக இருக்கும் திரு. மு. திருச்செல்வத்துடன் கலந்துபேசி தீர்மானிக்கப் பட்டதாகவும் அதன்படி, பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மீண்டும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாயும் திரு. பொன்னம்பலத்துக்கு தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

### கல்முனைப்பாதைக்கு தீகவாப்பி கல்

'வரலாற்றுப் புகழ்பெற்ற தீகவாப்பி தாதுகோபுரத்தைப்புனருத்தாரணம் செய்யும் தொல் பொருள் ஆராய்ச்சி இலாகா அக் கோபுரத்திலிருந்து அகற்றப்பட்ட கற்களைச் சம்மாந்துறை—கல்முனை வீதிக்குப் போட்டிருக்கிறது. புத்த பகவானின் நகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் இப்புனித கோபுரத்துக்கு அதிகாரிகளால் செய்யப்படும் இந்த நிந்தனையைக் குறித்து பௌத்த பிக்குகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.'

—ஜனதின (28-6-66).



கல்முனையில் நடைபெற்ற தமிழரசு மாநாட்டுக்கு, தமிழரசுத் தலைவர்கள் சென்றிருந்த போது, கல்முனை பாத்திமா கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் விருந்தளித்து மகிழ்ந்தனர்.

### தமிழுக்கு......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிக்குத் தனிப்பிரிவு நிறுவுவதற்கு மானியம் ஒதுக்கப்படவில்லை என்று நமக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இச்செய்தி உண்மையாயின் தமிழரசார் உடனடியாக பிரதமருடன் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

தமிழ் மொழிக்கு மொழித் திணைக்களத்தில் தனிப்பிரிவு நிறுவப்படுவதுடன் ஒவ்வொரு திணைக்களங்களிலும் தமிழ் மொழி வேலைகளைக் கவனிப்பதற்கு ஒரு கிளை உருவாக்கப்பட வேண்டும். ஒரு சில திணைக்களங்களில் இத்தகைய தமிழ் மொழிபெயர்ப்புக் கிளைகள் ஏற்கனவே செயற்பட்டு வருகின்றன. பெரும்பாலான திணைக்களங்களில் தமிழ் எழுது வினைஞர்களே மொழி அபிமானம் காரணமாக தமது வழமையான கடமையுடன் தமிழ்ப்பகுதியையும் கவனித்து வருகிருர்கள். ஒருவர் இரண்டு வேலைகளைக் கவனிக்க முடியாது. ஆகவே மத்திய வங்கி உட்பட சகல அரசாங்க திணைக்களங்களிலும் தமிழுக்குத் தனிப்பிரிவு நிறுவப்பட வேண்டும்.

மத்திய வங்கியில் இங்ஙனம் ஒரு தமிழ்பிரிவை நிறுவ முதலில் சம்மதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சிலரின் வேண்டாத தலையீடு காரணமாக தமிழ் மொழி பெயர்ப்புப் பகுதி சிங்கள அதிகாரியின் கீழ் சிங்களப் பகுதியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த முறை உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும். மத்திய வங்கியில் ஆண்டறிக்கைகளையும் மாதாந்த செய்தித்திரட்டுக்களையும் தமிழில் மொழி பெயர்பதற்கு மட்டுமே ஒரு தமிழ் பிரிவு வேண்டும். இந்த நிலையில் தமிழ்ப் பிரிவை சிங்களப் பிரிவுடன் இணைத்து சிங்கள அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் தமிழ் மொழி பெயர்ப்பு வேலைகள் நடைபெறுவது ஒழுங்காக மாட்டாது. எனவே மத்திய வங்கி அதிகார பீடம் உடன் தமிழ்ப் பகுதியை நிறுவ முன்வர வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்திவைக்க விரும்புகிரேும். பிரச்சினைகளைப் பெரிது படுத்தி பிரதமரினது கவனத்துக்கு எடுத்துச் செல்வது நிர்வாகத்தினருக்குச் சாதகமாக மாட்டாது என்பதையும் கூறி வைக்கிரேும்.


## அவசியமுள்ளவர்கள் யார் ?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?

★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?

★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

## T. K. அமிர்தா ஜீரண சக்தி லேகியம்

மனிதருக்கு நோய்கள் அண்டாமலிருக்க தினசரி மலப் பிரவர்த்தி யாதொரு தடையின்றி வெளியாகி குடல் சுத்தம் ஏற்படவேண்டும், அது இல்லாதிருக்குமானல், அதுவே சகல நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. மலம் சரியாக தினசரி வெளியாகாதிருந்தால் உண்டாகும் வாதம், மூலநோய்கள், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வலி, உஷ்ண ரோகங்கள், தாது நஷ்டம், சொறி சிரங்கு, முதலிய நோய்களுக்கு பலன் கொடுக்கும் சிறந்த மருந்து. பத்தியமின்றி உபயோகிக்கலாம்,

குறிப்பு: மூல இரத்தப்போக்கு, குடல்வாயு, இடுப்புவலி: இவைகளுக்கு ஒருதின உபயோகத்திலேயே குணம்செய்யும்.

**அமிர்தா ஜீரண சக்தி லேகியம்**

சிறிய புட்டி ஒன்றுக்கு ரூபா 3-00
பெரிய புட்டி ஒன்றுக்கு ரூபா 5-50
தபால் சிலவு வேறு.

விபரங்களுக்கு:

**செல்லராஜா அன்கோ**
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு. கொழும்பு-11.

# வெள்ளிக்கிழமை

## தையிட்டி அ. இராசதுரை

''அவற்றை அவ்வளவு துணிவு... இண்டைக்கி வெள்ளிக்''...

'' அம்மோய்...''

''என்னடியது...?''

''......நீங்களண்டைக்கி என்ரை மிசின் லாச்சிக்கை வைக்கச்சொல்லி என்னட்டைத் தந்தியள்... அந்தச் சீட்டுக்காசு எண்பது ருவாயும்......''

''ஓ......''

''......அதை''

''அதுக்கிப்பென்ன...?''

''...... அதையெடுத்து ஐயாட்டை சயிக்கிளுக்...''

''மெய்தானே... பொம்படிச்சியார்... அவளவிலை ... உமக்கு... நெஞ்சடி பெருத்துப்போச்சுதோ...? ...எடியெடி தோறை... தோறை... எங்கை... என்னுமொருக்காச் சொல்லடி பாப்பம்......''

''..............''

''உனக்கு சூட்டுக்கோல் காச்சி வைச்சிருக்கவேணும்... அப்பதான் நீ இண்டுமேற்பட்டு திருந்தி நடப்பாய்......''

''..............''

''நாளைக்கி உன்னையொரு குடும்பத்திலை விட்டாலும் நீ இப்படித்தானே நடக்கத் தெரியாமலுக்கு நடப்பாய்... நாங்கள் வெள்ளி செவ்வாயெண்டு ஒண்டையும் பாக்காமலுக்கு வீட்டாலை காசெண்டும் தங்கப்பவுணெண்டும் கொண்டு கொண்டு வெளிக்கிட்டுத்தானே...... இஞ்சை எங்களுக்கு வீடு விடியாமலுக்கு ஒரேயடியலாய் பிரமசத்தி பிடிச்சுப் போய்க்கிடக்குது...''

''..............''

''... அப்பனெப்பிடி நினைக்கிறரோ...... அந்த மாதிரித்தானே பிள்ளையும் நினைக்கும்... அதுகுமிண்டைக்கி வெள்ளிக்கிழமையாநாத்து அவர் நிண்டநிலேலை நாண்டு கொண்டு நிண்டு விட்டாலை காசு கொண்டு வெளிக்கிட...... நினையாத நினைவு நினைக்க வேணும்...... நீ ஒண்டையும் யோசிக்காமலுக்கு... எல்லாத்துக்கும் முந்தி கொப்பரின்ரை கையிலை வலுசுவமாய் வந்த காசை எடுத்து வைச்சுப் போட்டா... எல்லாம்சரியெண்டு நினைக்க வேணும்......''

''...உங்களுக்குச் சும்மா சிலேப்பேன் கிழிஞ்...''

''என்னடி... தொண்ணூறு வயது செண்ட கிழவியள் மாதிரி புறுபுறுக்கிறாய்...?''

''...நாவெண்டும் கிழவியள் மாதிரி...''

''கனக்கவேண்டாமடி... பாக்கியத்தின்ரை மேளைப் போய்ப்பார்... அங்காலை செல்லத்தின்ரை மேளைப் போய்ப்பார்... அவையளெல்லாரும் உன்னைப் போலதான் ஒரு வீட்டுமுறை குடும்பமுறையளும் தெரியாலிருக்கினமோ வெண்டதை ஆரும் நாலு பேரைக் கேட்டுப்பார்...... உன்ரை இந்த வயதிலை நாங்கள் குடும்பத்திலை போய் பின்னையும் பெத்துப் போட்டம்......''

''..............''

''கடவுளேயெண்டு கொப்பருக்கென்னகுறை.. நாவொருத்தி இராவிடியக் கண்ணைத் தூங்கித்தூங்கியிருந்து பெட்டிபன்னமிழைச்சு வித்துச் சேத்த ஒரு தொகைக் காசல்லே என்ரை வங்கியிலை கிடக்குது... எல்லா விளையாட்டுக்குமாக... ஓ... ஓ... பின்னையென்ன...... தேப்பனவை பேரனவையும் சயிக்கிளிலைதானே அண்டு துவக்கம் ஓடித்திரிஞ்சவை ... இப்பநாங்களும்... இண்டைக்கி வெள்ளிக்கிழமையாநாத்திலை ஒரு சயிக்கிளை வாங்கி கவட்டுக்கை வைக்காட்டிக்கி எங்களை சவையாலையல்லே தள்ளிப் போடுயினம்... ஆத்தையடி... இந்தச் சீத்துவக்கேட்டையெல்லாம் நினைக்க நினைக்க எனக்கொருதிக்கு எல்லாம்... பத்தி...''

''அம்மா... இனி நீங்கள் பறைஞ்சது காணும் விடுங்கோ...''

''நீ ஆரடி... என்ரை வாய்க்கிப் பூட்டுப் போட...''

'...ஐயா வருத்தவாளி... அவர் ஒரு நாளைக்கி சயிக்கிளொண்டில்லாமலுக்கு எத்தினை கட்டையெண்டுதான் நாங்கள் போ போவெண்டு சொன்ன இடங்களுக்கெல்லாம்... நடக்'

'ஆத்தே ... ஆத்தே ... பெரியபாவத்தார் ... ஏனெண்டா கொய்யா பெரிய கவுணரல்லே...... அவர் நடந்து திரிஞ்சால் ............'

'உங்கை அப்போதை கூடி என்னப்பா செய்யிறாய்...? மெய்யே...?'

'கையிலை ஒரலுவல் ... கொஞ்சம் பொறுங்'

'நீயென்ன காசச்சடிக்கிறியே...?'

**எமது சிறுகதை**

'இல்லை வாறன் ... வாறன்...... இண்டைக்கி வெள்ளிக்கிழமேலை பாத்து இதென்ன நெருக்கிடையெனக்கு... கேட்ட காசை கையிலை வைக்காட்டிக்கும் ...அழிவான் இண்டைக்கி என்ன கிழமையெண்டு ஒரேப்பனும் யோசிச்சுப் பாக்கப் போறானே... காசு... உங்கைஆரிட்டைக் காசு மாறலாம்......? பாக்கியம்... செல்லப் பாக்கியம்... செல்லம்... பாக்கியம்... பிள்ளை தங்கச்சி... ஒரு வியளம் ஓடியா...'

'என்னம்மா...?'

'பாக்கியக் குஞ்சியாச்சியிட்டைப்போய் இப்பிடி அம்மா நாளைக்கித் தல்லாமாமெண்டு இப்ப காசொரு எண்பது ருவாய் அவசரமாய் கைமாத்தாய் வாங்கியரட்டாமாமெண்டு நிண்டநிலேலை வாங்கிக்கொண்டு ஓட்டத்திலை ஓடியா......ம்... ஏன் தங்கச்சி நிக்கிறாய்...?'

'..............'

'நானுன்னட்டைச் சொன்னது என்னடியாத்தை...?'

'என்னம்மா நீங்கள்... பாக்கியக் குஞ்சியாச்சியவைக்குமிண்டைக்கி வெள்ளிக்'

'அது பறுவாயில்லை... நீ போய் கெதியாய் வாங்'

'உங்களுக்கொருமுறை.. மற்றவயளுக்கொரு முறை ... நான் மாட்'

'என்னடி சொன்னனீ... என்னடி சொன்னனீ...'

'ஐயோ... ஐயோ ... ஐஓ...'

'இதென்னப்பா... ஏன் பெட்டையைப் போட்டடிக்கிறாய் ...... ஆய் ... மெய்யே...?'

கொழுப்புப்பிடிச்சு வலு ஆங்காரமான பொம்பிளை... அவவுக்கு வாய்க்கு வாய் பேசி...'

'..............'

'அதுக்கு உன்னையாரிப்ப அவளின்ரை மேலிலை தொடச் சொன்னது...? மெய்யே......?

'நீங்களென்ன அறியாமைக் கதைக்கிறியள்... பாக்கியத்திட்டை என்ரை காசு நிக்குது... அதை உங்களுக்குத் தந்து விடுறதுக்கு போய் வாங்கிவாவெண்ண'

'எடி தோறை...ஒரு குமர்ப்பிள்ளையைப் பிடிச்சு போட்டு வா வெண்ட நேரம்...ஏன் நீ போய் வாங்கி வராதையன்... இஞ்சைவிடு நான் 'போய்'

'இல்லையில்லை நான் போட்டு வாறன்...'

'......பிள்ளை நீ அழாதை. ...எல்லாம் வளத்திலை வரும்...போதுமப்பா... ஒரு சயிக்கிள் கட்டையெடுக்கிறதுக்கு நான் படுகிறபாடு...சூய்...சூய்...உச்சுபிடி... உச்சுபிடி...சூய்.... .......பூனைப் பிள்ளேன்ரை துணிவு... களவெடுக்க வந்து என்னட்டைச் சரியாய் பிடிபட்டுப்போனார்.........'

'இல்லையக்காள்... நீங்களிப்ப கேட்டகாசு நான் தராமலுக்கல்ல...... இண்டைக்கி வெள்ளிக்'

சும்மாவிடு பாக்கியம்; கண்டறியாத என்னம்மொரு வெள்ளியும் செவ்வாயுந்தான்...உந்த முறையளொண்டும் நாங்களிப்ப பாக்கிறதில்லை... வெள்ளிக்கிழமேலை விட்டாலை காசு கொண்டு வெளிக்கிட்டவையளெல்லாரும் என்ன செத்துக் கெட்டுப் போச்சினமே பாக்கியம்...?'

'..........'

'என்ன பாக்கியம்... நீயுப்ப ஒரு அவசரத் தேவைக்கெண்டு என்னட்டை காசு கை மாத்தாய் வந்து கேட்டா... நானென்னடியாத்தை உன்னைப் போலை வெள்ளி செவ்வாயெண்டே பாக்கப் போறன் மெய்யே...? அப்பிடி உனக்கு தர மனமில்லாட்டிக்குச் சொல்லு ...நான் வேறையெங்கையாலும்...'

'பின்னைச் சரியக்காள்... இதிலை உங்கடை அந்தரத்தை பார்த்துக்கொள்ள மாட்டாமலுக்கு... நானெனியென்ன செய்றதெண்டு போட்டுத்தான் இண்டைக்கி வெள்ளிக்கிழமையெண்டதையும் பாக்காமலுக்கு ஒம்படுறன்....எவ்வளவு...எண்பதோ....?

'ஓ எண்பதுதான்.........'

'இருந்துகொள்ளுங்கோ வாறன்'

'.................'

'......இந்தாருங்கோ... பத்து..இருவது..முப்பது... நாப்பது..ஐம்பது..அறுவது எழுவது...எண்பது...சரிதானே......'

'ஓ சரிதான்.........அவருக்கு கண்டறியாத சயிக்கிள்...எனியொருக்கா சயிக்கிளிலை ஓடித்திரியாட்டிக்கி.. ஒருதரும் சம்மந்தப் பேசிவராயினம்... உந்த மனிசாதி மனிசரெல்லாம் சயிக்கிளில்லாமலுக்கு காலாலை உந்தத் தேசாதி தேசமெல்லாம் நடந்து திரிஞ்சு ஒரு கருமமும் பாக்கேலை......என்ன பாக்கியம் சிரிக்கிறாய்... மெய்யே...?

'இல்லையக்காள்...நீங்களேன் அந்த மனிசனை சும்மா ஏசிறியள்...'

'நீ என்ன பாக்கியம் கதைக்கிறாய்...அந்த மனிசன் செய்யிற வேலைக்கி நானென்ன அந்த மனிசனை ஏசாமலுக்கு கட்டிப் பிடிச்சுக் கொஞ்சுறதே......... என்னபாக்கியம் கண்டறியாத சிரிப்புச்சிரிக்கிறாய்...'

'நீங்கள் பேசுற கதையைக்கேக்க எனக்குச் சிரிப்புத்தானக்காள் வருகுது... என்னக்காள் எங்கடை ஆம்பிளையளை நாங்கள் நல்ல வடிவாய் வைச்சிருந்தாத்தானே நாங்களும் நல்லாயிருக்கலாம்......... ......இதைக் கேளுங்கோவனக்காள்...எங்கடையவர் முப்பது பவுணுக்கு புதுசாய் ஒரு சயிக்கிளொடுத்து இப்ப ஒவ்வொரு நாளும் அதிலை பிழை வர வர அதுக்கெண்டு எத்தினை பவுணைச் செலவழிக்கிறார்... அதுக்கெல்லாம் அவர் கேக்கக் கேக்க நான்தானக்காள் ம் ஆமெண்ணுமலுக்குக் காசு குடுக்கிறன்...என்ரை முறை உங்களுக்கெண்டால் ... நீங்களெப்பவோ . செத்திருப்பியள்...'

'அதில்லைப் பாக்கியம்... நாவேன் சொன்னனெண்டால் வெள்ளிக்... ஐயோ ...ஐயோ...பாத்தியே... என்ரை மூளை மாறுட்டத்தை...நான் விசர்க்கொத்தி.'

'எவளவிலையிருக்குது...'

'..............'??

'இந்தக் காசெண்பது ருவாவையும் அப்பிடியே பச்சப்படிய வீட்டுக்கை இண்டைக்கி வெள்ளிக்கிழமேலை எடுக்கப்படாதெண்டுவைச்சுக்கொண்டு நீ என்ன துணிவிலை இஞ்சை காசு மாற வந்தனீ... மெய்யே...'?

'..............'

'ஏன் தலையைக் குனியிறாய்...? பெரிய கெட்டித்தனமல்லே செய்து போட்டாய்...... நீ இண்டைக்கி; நான் வெள்ளிக்கிழமேலை காசு கேட்டுப் போட்டனெண்டு வீட்டிலை நடத்தின புதினங்களெல்லாம் எனக்கு நல்லாய்த் தெரியும்......'

'..............'

'களவெடுக்க வந்த பூனையை நானிண்டைக்கி கையும் மெய்யுமாய் பிடிச்சுப் போட்டன்......வீட்டிலை ஆருக்கும் சிவமோசமாய் ஏதாலும்......பரியாரி வீட்டை காசு கொண்டு போறதுக்கும் இண்டைக்கி வெள்ளிக்கிழமையெண்டு தானே பாப்பாய்...

'..............'

'சரி சரி...நீ ஏனென்னை அணிலேறவிட்ட நாய் மாதிரிப் பாக்கிறாய்...இஞ்சை யார் காசு.............. இண்டைக்கி வெள்ளிக்கிழமைதானே.........'

(யாவும் கற்பனை)

---

உருவகக் கதை

# சக்தி

பரந்து, விரிந்து, கிடக்கும் பல்லுயிர்கள் வாழும் பிரபஞ்சத்தின் கூரையாக விளங்கும் நீல வானை மறைத்து, எத்தனையோவகை முகிற் கூட்டங்கள், காற்றின் அதிகாரத் தொனிக்கு அடிபணிந்து, ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்குத் தவழ்கின்றன.

அகிலமாந்தரின் வகை நிறங்களையும், எடுத்துக் காட்ட விழைந்தாற்போல், நீலவானின் ஒவ்வொரு அந்தங்களும் நிறங்களைத் தீட்டியிருக்கின்றன.

வானின் உச்சிப்பகுதியின் தென்கிழக்காக, கன்னங்கரேல் என்ற கார்மேகக் கூட்டமொன்று, வெண் பனிப் பிரதேசத் தூய நிறத்தோயலான பால் மேகத்துடன் சங்கமிக்கிறது. கதிரவனின் ஆட்சி அங்கே கம்மிப் படர்கிறது.

கார் மேகத்தைக் கண்ட வெண்மேகத்தின் இதயத்திலே நிற வெறியால் பெற்ற வேற்றுமை வெள்ள மாரியாகப் பாய்கிறது. சீற்றத்தின் சீறல்.

''கரியுருவே, என்னுடன் கலக்கிறாயே. சீ! வெட்கமாயில்லே? அவலட்சண உருவைக் காட்டிப் பெருமையடிக்க வந்தாயோ? போ! போ! என்னுடன் சேராதே'' நிறப்பிரிவினை காட்டி இனப்பிரிவினை நிகழ்த்துகிறது வெண் மேகம்.

கேவலம். உருவின் அழுக்காக இத்தனை பேயாட்ட வெறிகளா?

''நண்பா, உலக மாந்தரின்கீழ் செயலை விழைந்து விட்டாயா? நாமெல்லாம் ஓரினம், ஓர்குலம். மனிதர்களல்ல''. கார், மேகம் சாந்த உருவாகசாந்தத் தீயைக் கொளுத்துகிறது. அந்தத் தீயிலே அதன் உளப்பிரகாசம்.

''ஏ பழிப் பொருளே, பரிவாகப் பேசினால் அணைத்துவிடுவேனென்ற ஆசையோ ஆஹா! ஏன் தான் இந்த வீண் விருப்புகள். என் முன்னே பேசாதே'' வெண் மேகத்தின், முரட்டுச் சுபாவத்தின் கர்வக் கொட்டம் அடங்காத பேச்சு.

எங்கிருந்தோ, இடி இடிக்கும் ஓசை, வானைப்பிளக்கிறது. மக்களின் மனதிலே இனம் புரியா மகிழ்ச்சி.

**தூயவன்**

வெண் முகுற் கூட்டங்கள் பயந்து துளங்குகின்றன. அகிலம் அழும் கண்ணீர் ஒழியப் போகிறதே என்ற உவகைப் பிரவாகம் கருமேகங்களைச் சூழ்ந்திருக்கின்றன, களிப்பினால் கருமேகப் படலம் குலுங்குகிறது.

மறுகணம், தன்னால் கோர்க்கப்பட்ட மழைச் செல்வத்தைத் தரணிக்கிய்கிறது, மாந்தரின் மட்டற்ற மகிழ்ச்சியைக் கண்டு, கார் மேகம் தனக்குள் சிரித்துக் கொள்கிறது.

''நண்பா, என்னை மன்னித்துவிடு. சிப்பிக்குட் தான் முத்து, சிறிப்பாய்ந் தேன். சிந்தனையற்ற அறிவின் முரடு. உலகம் உன்னால் உவகை வெள்ளத்தால் மகிழ்கிறது'', அகந்தையின் குரல், கார் மேகத்தின் தன்மையைத் தன் அறியாமையால் முன்பு உணர்த்து சபித்துவிட்டு தனக்குள் கண்ணீர் கொட்டுகிறது.

## கல்முனை மாநாட்டின் வெற்றிக்கு

# அயராது உழைத்த பெருமக்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாடு சிறப்புற நடந்தேறியமைக்கு முக்கிய காரணம் வரவேற்புக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் அயராத உழைப்பும் கடமையுணர்ச்சியுமே. கடந்த பொதுத் தேர்தலில் பொத்துவில் தொகுதியில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்ட ஜனாப் எம். எஸ். காதர் அவர்கள் மாநாடு நடைபெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னரே தமது சொந்த வேலைகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு மாநாட்டு ஒழுங்குகளைக் கவனிப்பதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்



க. மு. செல்லையா

ளார். ஜனுப் காதர் அவர்கள் மாநாட்டு ஒழுங்குகளைக் கவனித்துக் கொண்ட அதே நேரத்தில் ஆங்காங்கே கட்சிக் கிளைகளை அமைக்கவும் தவறவில்லை.



பொ. வி. கந்தையா

மாநாட்டுப் பிரதிநிதிகளை இன்முகம் காட்டி வரவேற்றதுடன், கட்சியின் முக்கிய ஆலோசனைக் கூட்டங்கள் அமைதியான முறையில் நடைபெற ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுத்த பெருமை நொத்தரிசு திரு. பொ. வி. கந்தையா அவர்களுக்கே உரியது. இவரின் குடும்பமே ஒரு தமிழரசுக்



சொ. சாமிஐயாத்தேவர்.

குடும்பம். மாநாட்டு மாதர் அணித் தலைவிகளில் ஒருவராக செல்வி கந்தையா விளங்கினுர். செல்வன் கந்தையா தமது புதிய கல்லூரியிலிருந்து விடுமுறை பெற்று வந்து இரவு பகல் என்று பாராது மோட்டார் வண்டியின் 'ஸ்டயிறிங்'கே தஞ்சம் என்று வாழ்ந்தார். பிரதிநிதிகளை இன்முகம் காட்டி வரவேற்று அவர்கள் வழி தவருது ஆங்காங்கே அழைத்துச் செல்லும் பணியுடன் கட்சித்தலைவர்களின் தேவைகளையும் கவனிக்க அவர் தவறவில்லை. திரு. கந்தையா அவர்கள் நடுநாயகமாக இருந்து கொண்டு அனைத்தையும் செயற் படுத்தியதுடன் அனைவரையும் இன்முகங் காட்டி ஆதரிக்கவும் தவறவில்லை. இவரேவரவேற்புக்குழு பொருளாளரும்.

வரவேற்புக் குழுச் செயலாளர் பதவியைப் பொறுப்புடன் ஏற்று திறம்பட நடாத்தி முடித்தார் திரு. சொ. சாமிஐயாத்தேவர். வெளியிடங்களிலிருந்துவந்த மூவாயிரம் பிரதிநிதிகளையும் உரிய இடங்களில் தங்க ஏற்பாடு செய்ததுடன் அவர்களின் பொருட்கள் அனைத்தையும் பொறுப்பேற்று ஒரு சிறு தவறுக்கும் இடமகொடுக்காது அவற்றை காப்பாற்றிக் கொடுத்த பெருமை இவருக்குஉரியது. கடமையே கண்ணுக தமக்குக் கொடுககப்பட்ட கடமையிலிருந்து சிறிதும் விலகாது இவர் பணியாற்றிய முறை பலரினதும் கவனத்துக்கு இலக்காகியது. தமிழரசுத் தொண்டர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்தவர்கள் என்பதை திரு. சாமிஐயாத்தேவர் நிரூபித்துவிட்டரர்.

நிர்வாகச் செயலாளர் பொறுப்பை ஏற்றிருந்த திரு. க. மு. செல்லையா தமது கடமைக்கும் மேலாக பல காரியங்களைத் திறம்படச்செய்து முடித்துள்ளார். மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கான ஒழுங்குகளையும உணவு கொடுப்பதறகான வசதிகளையும் அவர் செய்து முடித்ததுடன், மாநாட்டு மேடைகளை அழகுற அலங்கரித்த பெருமையும் அவருக்கே உரியது. பலரும் மேடை அமைப்பைப் பாராட்டினுர்கள் என்ருல் அத்தனை பாராட்டுகளும் திரு. செல்லையா அவாகளுக்கே சேர வேண்டும்.


மாநாட்டுப் பிரச்சாரப் பகுதியை ஏற்றிருந்தவர் வரவேற்புக்குழுத் தலைவரான ஜனுப் எஸ். இஸட். எம். மசூர்மவுலானு அவர்கள். அவரின் தன்மைக்கு ஏற்ற பொறுப்பே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பழக்கப்பட்ட வேலையைப் பக்குவமாகச் செய்து முடித்தார் ஜனுப் மவுலானு, ஓஸ்மன் மேர்சா அவர்களும் இவர்களுக்கு பலவழிகளிலும் துணை நின்று உழைத்தார். தமது காலத்தையும் தொழிலையும் பொருட்படுத்தாது அவ. பல தினங்களாக மாநாட்டின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார்.

பாரதிவிழா

## போட்டிக்கான பரிசில்கள்

கொழும்பு ஏற்றுமதி இறக்குமதித் திணைக்கள தமிழ் இலக்கிய மன்றம் எதிர்வரும் செப்டம்பர் திங்களில் பாரதிவிழா ஒன்றினைச் சிறப்பாகக் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொண்டு வருவது தெரிந்ததே. இவ்விழாவினையொட்டி அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கிடையில்கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி ஆகியவற்றையும் விழாக் குழுவினர் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

இப்போட்டிகளில் முறையே முதல் பரிசுபெறுபவர்களுக்கு ஒவ்வொரு தங்கப் பதக்கம் வழங்க கொழும்பு வர்த்தகப் பிரமுகர்களான திரு. இரத்தினசபாபதி (மெய்கண்டான் அதிபர்), திரு. நீதிராசா (யானைபிடி அதிபர்), திரு. சண்முகராஜா (சண்முகராஜா நகைமாளிகை) ஆகியோர் முன்வந்திருக்கிருர்கள் என்று மன்றச் செயலாளர் திரு. கனகரத்தினம் தெரிவித்துள்ளார். இப்போட்டிகளில் இரண்டாம் மூன்றும் இடத்தினைப் பெறுபவர்களுக்கும் தரமான பரிசில்களை வழங்க விழா குழுவினர் முயன்று வருகிருர்கள்.

# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனுல் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்,

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

J.W.T R.C.9

# 'வெண்ணிற ஆடை'

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

ஸினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் திரைப்படம் ஒன்றை இலவசமாகப் பார்ப்பதற்கு இப் போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப் போட்டியில் கலந்துகொள்வதற்கு எது விதமான கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும், சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும், ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப் போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

**விதிகள்:**

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்'களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும், சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச்சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக் கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனோ சினிமாஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**பரிசுகள்**

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல் பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள்விதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 5-8-66**

15-8-66 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.

விடைக்கான கூப்பன் 13-ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி;

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில்

'வெண்ணிற ஆடை' இலவசப் போட்டி

என்று எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## "யாருக்காக அழுதான்" படப்பிடிப்பு ஆரம்பம்

பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தனின் ஆசிய ஜோதி பிலிம்சார் தமது இரண்டாவது படமாகத் தயாரிக்க விருக்கும் 'யாருக்காக அழுதான்' ஆரம்ப விழா வெங்கடேஸ்வரா சினிடோனில் நடைபெற்றது. சரவணா பிலிம்ஸ் ஜி. என். வேலுமணி படப்பிடிப்பைத் தொடக்கி வைத்தார். இப்படத்தின் கதாநாயகனாக நாகேஷ் நடிக்கிறார்.

ஆரம்பத்தில் இப்படத்தை சரவணா பிலிம்சார் ஸ்ரீதரின் டைரக்ஷனில் தாங்களே உருவாக்க இருந்தனர். இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டது.

# லண்டன் தமிழர்களுக்கு உதவியவர் எம். ஜி. ஆர்.

—————o—————

## கொடையளிப்பு விழாவில் நாவலர் புகழ்மாலை

சமீபத்தில் நாவலர் நெடுஞ்செழியன் இலண்டனுக்கு விஜயம் செய்திருந்த போது இலண்டன் தமிழ்ச் சங்கத்தினர் எம். ஜி. ஆரிடம் தங்கள் சார்பாக ஒப்புவிக்கும்படி இரண்டு போர் வீரர் சிலைகளை கொடுத்தனுப்பியிருந்தார்கள். இந்தப் பரிசுப் பொருட்களை சென்னையில் நடைபெற்ற தங்கவாள் கொடையளிப்பு கூட்டத்தில் எம். ஜி. ஆரிடம் நாவலர் ஒப்புவித்தார். பரிசுப் பொருட்களைக் கொடுத்து நாவலர் பேசுகையில் கூறியதாவது:—



'தமிழ்ச் சங்கத்துக்கு என்று ஒரு கட்டிடம் இருந்தால் இலண்டன் வரும் உலகின் பெரும் பேராசிரியர்கள் தலைவர்கள் எல்லாம் தமிழின் பெருமை பற்றி அறிந்து கொள்வார்கள் என்ற நோக்கத்துடன் நிதி திரட்டினார்கள். அப்போது இங்கே உள்ள பெரிய பெரிய நடிகர்களுக்கெல்லாம், அகில இந்தியப் புகழ, அகில உலகப் புகழ் பெற்ற நடிகர்களுக்கெல்லாம் கடிதம் எழுதினார்கள். ஏதும் பதிலில்லை.

ஆனால் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஒருவர்தான் கடிதம் கிடைத்தவுடன் 'நாடோடி மன்னன்' படத்தை இலண்டனுக்கு அனுப்பி வைத்தார். அதன் மூலம் வந்த தொகையை கட்டிட நிதிக்கு கொடுத்தார்.

'தனக்குப் பதிலாக 'நாடோடி மன்னனை' அனுப்பி அங்கே தமிழர்கள் மட்டுமின்றி ஆங்கிலேயர்களும் கண்டு மகிழும்படி செய்தார். அதன் மூலம் வசூலான 700 பவுணகள் சுமார் ரூபா 10,000 மதிப்புள்ளவை, அந்தச் சங்கத்துக்கு அளிக்கப்பட்டது.

'அந்தக்கொடைக்கு அவர்கள் செலுத்தும் அன்பின் காணிக்கையாக அவர் எப்படி திரையில் வாள் தூக்கிப் போரிடுகிறரோ-அனியாயக்காரர்களை, அக்கிரமக்காரர்களை, ஊரையடித்து உலையில் போடுபவர்களை- எப்படித் திரையில் வீழ்த்துகிறரோ—எப்படி ஒரு படத்திலாவது அவர் நன்மை செய்யாமல் கதை முடிவதில்லையோ- அது போல நாட்டில் ஏற்பட்டுள்ள அநியாயக்காரர்களை, அக்கிரமக்காரர்களைவீழ்த்தி- நேர்மையையும் நீதியையும் நிலைநாட்டப் பாடுபடும் புரட்சி நடிகருக்கு தங்கள் அன்பின் காணிக்கையாக—விலையல்ல முக்கியம்-முக்கியத்துவம் வாய்ந்த 13ம் நூற்ருண்டு ஆங்கிலேய வீரர்களின் சிலைகளை ரோம், கிரேக்கம் டென்மார்க், பிரான்ஸ் போன்ற பல நாடுகளின் நாகரிகங்கள் ஒன்று சேர்ந்த ஆங்கில நாகரிகத்தைக் கொண்ட இரு வீரர்களது சிலைகளை ஏற்க ஏற்றவர் எம். ஜி. ஆர் தான் எனக்கருதி அவற்றை அனுப்பியுள்ளார்கள்.'



உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் அவர்களின் இல்லத்திற்குச் சென்று தமது மரியாதையைத் தெரிவித்துக் கொள்ளவும் திரு. தங்கவேலு தவறவில்லை. உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு திருச்செல்வம், அவரது பாரியார் திருமதி புனிதம் திருச்செல்வம் ஆகியோருடன் தங்கவேலுவும் அவர் குடும்பத்தினரும்.

— படம்! ராஜப்பன்.

## கண்ணகி வில்லுப்பாட்டு

29-5-66 ஞாயிற்றுக்கிழமை காரைத் தீவு இந்து சமய விருத்திச் சங்கத்தினர் நடாத்திய சிலப்பதிகார விழாவில் மாணவிகள் நடாத்திய கண்ணகி கதை வில்லுபபாட்டுச் சிறப்பம்சமாக விளங்கியது. மேற்படி வில்லுப் பாட்டில் மட்டுநகர் வின்சன் மகளிர் கல்லூரி மாணவிகளான செல்வகள் யோகேஸ்வரி-ஐயாக் குட்டி, கமலேஸ்-சினித்தம்பி வசந்தி-சபாநாயகம், சியாமளா-மதுரநாயகம், வதனி-குமாரசாமி, லோகேஸ்வரி-பொன்னையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கௌரவிக்கப்பட்டார்**

காரைதீவில் 'ஆசிரியமணி சாமித்தம்பி' தலைமையில் நடைபெற்ற இந்து சமய விருத்திச் சங்கதின் சிலப்பதிகார விழாவில் மேற்படி சங்கத்தின் சார்பில் கிராம சபைத் தலைவர் டாக்டர் பரசுராமன் அவர்களால் 'வில்லிசைச் செல்வன்' மாஸ்டர் சிவலிங்கத்திற்குப் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

## நீச்சல் உடையில் நடிக்க நான் தயார்

—————o—————

### நடிகை ஜயந்தி கூறுகிறர்

'படங்களில் நான் கவர்ச்சியாகத் தோன்றுவதையே ரசிகர்கள் விரும்புகிறர்கள். ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதுதானே எமது வேலை? நீச்சல் உடை அணிந்து நீச்சல் காட்சியில் கவர்ச்சியாகத் தோன்றுவதில் தவறு எதுவும் கிடையாது' இவ்வாறு நடிகை ஜெயந்தி கூறுகிறர்.

அவர் மேலும் கூறியதாவது:—

'கவர்ச்சியான உடல் அழகை மெருகூட்டி சில காட்சிகளில் நடிப்பதால் ரசிகர்களின் மனத்தில் நிலைத்து நிற்க முடியும் என்பது என் கருத்து. காதல் காட்சிகளில் சிறிதும் கூச்சம் கூடாது. கூச்சப்பட்டால் நடிப்பு எடுபடாது. டைரக்டர் சொற்படி எவ்வளவு நெருங்கி நடிக்க வேண்டுமோ அவ்வளவு நெருக்கமாக நடிக்க வேண்டும்.



டணுல் தங்கவேலு அவரது இரு மனைவிகள் சகிதம் மட்டக் களப்புப் பிரதிநிதி திரு. இராசதுரையுடனும் அவரது மகள் களுடனும் காணப்படுகிறர்.

— படம்! ராஜப்பன்.

# நாட்டுப் பாதுகாப்புக்கு என்னாலானதை தருகிறேன்

## தங்கவாள் கொடையளிப்பு விழாவில் மக்கள் திலகம் பேச்சு

"எங்களது நடிப்பு ஏழை எளியவர்களின் துன்பங்களை படங்களில் காட்டவே. பணக்காரனாக நடிக்கும் கட்டங்களிலும் ஏழையின் வேதனையை உணர்ந்தே நடிக்கிறோம். எங்களது நடிப்பை படத்தில் காண்பதற்காகச் செலவு செய்யும் மக்களுக்குக் காட்டும் நன்றிக்கடனே நான் வழங்கும் தொகைகள். மற்றபடி நான் எந்த வகையிலும் கொடையாளன் என்று கூறிக்கொள்ளும் தகுதி படைத்தவனல்ல. எனக்குக் கிடைப்பதில் ஒரு பங்கை நாட்டுக்காகவும் தருகிறேன்' இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தங்கவாள் கொடையளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.



மதுரை மக்களால் பல ஆண்டுகளுக்கு முன்பு புரட்சி நடிகருக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட தங்கவாளை, நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்க முன்வந்தது வாசகர்கள் அறிந்ததே. இந்த வாள் அளிப்பு விழா சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு நாவலர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். எம். ஜி. ஆர். மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'எனக்கு மதுரை மக்களால் அளிக்கப்பட்ட இந்தத் தங்கவாள், வாழ்வுக்கு, சொத்தாக தரப்படவில்லை. நல்லெண்ணத்துக்கு அடையாளமாகவே வழங்கப்பட்டது.

'எந்தத் தங்கத்தையும் தாயின் உயிருக்கு ஈடாக்க முடியாது. நாட்டுக்கு வந்துள்ள ஆபத்தைப் போக்க, நோய் வாய்ப்பட்டிருக்கும் தாய்க்குத் தரப்பட்ட ஊசி மருந்தாக-இந்தத் தங்கவாளை வழங்குகிறேன். தாய் இறக்காமல் இருக்க இத்தங்கம் ஓரளவு பயன்படுமானால், அதை மதுரை மக்கள் தருவதாக நம்பி இதை வழங்குகிறேன்.

'இதுவரை பெற்றிருக்கும் அன்பைவிட இன்னும் கோடிக் கணக்கான மக்களின் அன்பைப்பெற இதை நான் தருகிறேன்.

'மனிதர்கள் வரும் போதும் எதையும்கொண்டுவருவதில்லை. போகும் போதும் எதையும் கொண்டு செல்வதில்லை.

எம். ஜி. ராமச்சந்திரன் சாகும்போது ஒரு ஏழையாகவே செத்தான் என்ற செய்தியை நீங்கள் ஒருநாள் காணத்தான் போகிறீர்கள்.'

# நம்பினால் நம்புங்கள்!

★ இன்று தமிழ்த் திரை ரசிகர்களின் கனவுக் கன்னியாகக் காட்சிதரும் கவர்ச்சி நடிகை கே. ஆர். விஜயா, சினிமாவுக்கு வரு முன்பு தெய்வநாயகி என்ற பெயருடன் அமச்சூர் நாடக நடிகையாக இருந்தவர். கே. ஆர். விஜயாவிடம் ஒரு பழக்கம் இருக்கிறது. அதைக் கூர்ந்து கவனித்தால்தான் அவதானிக்க முடியும். வாயில் நகத்தை வைத்துக் கடித்துக்கொண்டுதான் எவருடனும் பேசிக்கொண்டிருப்பார். விரல்களில் ஒன்றை உதடுகளுக்கு அருகில் வைத்துக் கொண்டே பேசுவது போற்தோன்றினாலும், முன்னால் நிற்பவர் கவனியாமல் இருக்கவே விஜயாவின் பத்துவிரல்களையும் அவரின் வெண் பற்கள் சுவை பார்த்து விடும்.

★ இலட்சிய நடிகை விஜயகுமாரியிடம் சிறந்த சிறுகதைகளோ, நல்ல தொடர் கதைகளோ கிடைத்தால் உடனே அவற்றை படித்து முடித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். எஸ். எஸ். இராசேந்திரன் சொந்தப் படம் எடுப்பதற்கு ஏற்ற கதையை பொறுக்கி எடுக்கும் பணியை மனைவிவிஜயகுமாரியிடமே விட்டிருக்கிறார். விஜயகுமாரியைப் படிக்கச் சொல்லிவிட்டு எஸ். எஸ். ஆர். அதைக் கேட்டுக் கொண்டிருப்பதும் உண்டு.


★ நடிகை சௌகார் ஜானகி ஓய்வு நேரங்களில் என்ன செய்கிறார் தெரியுமா? காலில் காலணியுடன், கவுனையும் மாட்டிக் கொண்டு சமையற் கட்டில் புகுந்து சமையல் செய்ய ஆரம்பித்து விடுவார். படப்பிடிப்பு இல்லாத நாட்களில் தனது வீட்டுச் சமையலை அவரே கவனிப்பதுடன் அன்று அவரது வீட்டுக்கு போகிறவர்களிடம் தனது சமையலை 'டேஸ்ற்' பண்ணாமல் வெளியே அனுப்பமாட்டார்.

★ கவர்ச்சி நடிகை தேவிகாவுக்கு கடலை உருண்டை என்றால் அலாதிப் பிரியம். சிறுமியாக இருந்தபோதே கடலை உருண்டையில் அவருக்கு ஏற்பட்ட மோகம் இன்னும் தீரவில்லை. ஓயாமல் கடலை உருண்டையை தின்று கொண்டே பேசிக் கொண்டிருப்பார் தேவிகா

★ நடிகையர் திலகம் சாவித்திரி இடது கைப் பழக்கம் உள்ளவர் என்பது யாவரும் அறிந்ததே. இடது கையினால் கிரிக்கட் மட்டையைப் பிடித்துக் கொண்டு வெகுலாவகமாக கிரிக்கட் ஆடவும் பழகி வைத்திருக்கிறார் சாவித்திரி.

★ காதல் மன்னன் ஜெமினி கணேசன் ஓய்வு நேரத்தில் தனது தோட்டத்துக்குச் சென்றுவிடுவார். காய்கறி மரங்களுக்கும், பூமரங்களுக்கும், தண்ணீர் பாய்ச்சுவது முதற்கொண்டு தோட்ட வேலைகளை அவரே கவனிப்பார். வெறும் உடம்புடன், வெறும் தரையில் புரண்டு உருளுவதில் ஜெமினி கணேசன் தனி இன்பமடைவார்.

★ ஜெயலலிதாவெளியே புறப்படும் போதெல்லாம் ஒன்றை எடுத்துச் செல்ல மறப்பதில்லை. அது என்ன தெரியுமா? டிரான்சிஸ்டர் ரேடியோதான் அது. படப்பிடிப்பு இடைவேளைகளிலும் ஏனைய ஓய்வு நேரங்களிலும் டிரான்சிஸ்டரைப்போட்டுக் கேட்டுக் கொண்டே இருப்பார் ஜெயலலிதா.



பல இலட்சக்கணக்கான ரூபா செலவில், பிரமாண்டமான அளவில் திரு. ஏ. பி நாகராஜனால் உருவாக்கப்பட்ட 'திருவிளையாடல்' படம் விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் காட்சியளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது. இப்படத்தில் நடிகப் பேரரசர் சிவாஜி கணேசன் சிவனாகவும், நடிகையர் திலகம் சக்தியாகவும் நடித்துள்ளனர். வண்ணத்தில் தயாரிக்கப்பட்டிருக்கும் இப்படத்தில் நடிகர் திலகம் ஆடும் ருத்திர தாண்டவம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறதாம். திருவிளையாடலில் தோன்றும் கிழவி ஔவையையும் குழவி முருகனையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

# "வெண்ணிற ஆடை"

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

### விடைக் 'கூப்பன்'

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஜெ | ய | 2 ல | லி | 3 தா | ■ | 4 இ | 5 |
| 6 | | ம | ■ | | ■ | 7 | ல |
| | ■ | | ■ | 8 த் | 9 ந் | | |
| ■ | 10 வி | | ■ | ■ | | ■ | ■ |
| 11 | ரோ | ■ | 12 ம | | யா | | 13 |
| ■ | | ■ | 14 | உ | | ■ | |
| 15 | ■ | 16 | ள் | ■ | ■ | 17 வி | |
| 18 பா | | ■ | 19 நா | | | | ம் |

முழுப் பெயர்........................................

முகவரி........................................

........................................

........................................

........................................
நீங்கள் படம் பார்க்க வசதியாக உள்ள தியேட்டரின் பெயர்

........................................
ஊர்

........................................
கையொப்பம்

## இடமிருந்து வலம்

1. வெண்ணிற ஆடையின் கதாநாயகி இவர்.
4. இரட்டையர்களின் இது வெண்ணிற ஆடைக்கு சிறப்பைத் தருகிறது.
6. கூற்றுவன் உருமாறிக் கிடக்கிறன்.
7. வலமிருந்து வாசித்தால் இது ஒரு பிரபல பின்னணிப் பாடகியின் பெயர்.
8. வெண்ணிற ஆடை கதாநாயகனின் பெயர் தலைகீழாகக் கிடக்கிறது.
10. விநியோகம் தடைப்படுகிறது.
11. பிரபல தமிழ்க் கதாநாயகியொருவரின் முதல் இரண்டு எழுத்துக்களும் இவை.
12. வெண்ணிற ஆடை கதாநாயகியை ஆரம்பத்தில் பிடித்தாட்டும் இது இங்கே மாறுபட்டுக் காணப்படுகிறது.
14. ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய இது இப்படியாகி விட்டதே!
16. இது தீண்டினால் வேதனைதான்.
17. குரங்கு குத்துக்கரணம் போடுகிறது.
18. இன்றைய தமிழ்ப்படங்களில் இந்த உணர்ச்சி அதிகமாக இருப்பதாக பலரும் குறைப்படுகிறார்கள்.
19. இந்த வாத்தியத்தின் ஒலி வெண்ணிற ஆடை கதாநாயகிக்கு கிலியை ஊட்டுகிறது.

## மேலிருந்து கீழ்

1. வெற்றி.
2. வெண்ணிற ஆடையில் சிறீதர் அறிமுகம் செய்து வைத்த புதுமுக நடிகை பூரணத்துவமற்ற நிலையில் தலைகீழாகக் காணப்படுகிறார்.
3. பேரன் தடுமாறுகிறார்.
5. வெண்ணிற ஆடை துணை நடிகையின் இயற் பெயர் இதுதான்.
9. ஜயலலிதாவின் தாயார் உருமாறி விட்டாரே!
10. பகைவன்.
12. அடுத்த நாள் அலங்கோலப்பட்டு விட்டது.
13. ஸ்ரீதரின் கதைகளில் இந்த உணர்ச்சி அதிகமாக இருக்கும்.
15. வெண்ணிற ஆடையில் ஜெயலலிதா இந்தப் பெயரில் வருகிறார்.
17. கீழிருந்து வாசித்தால் சூரியன் வெளிப்படுவான்.

# தமிழ் இலக்கியத்தில் நாவலின் நிலை

## திரிநோக்கு [2]

## செம்பியன் செல்வன்

திரிநோக்கின் முதல் நோக்கான திரு வ. அ. இராசரத்தினம் அவர்களின் கட்டுரை கடந்தவாரம் வெளியாகியது, இரண்டாவது நோக்காக திரு. செம்பியன் செல்வன் அவர்களின் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது. திரு. செம்பியன் செல்வன் சிறந்த சிறுகதை எழுத்தாளர். அத்துடன் நல்ல விமர்சகரும் கூட. இக் கட்டுரை அவரின் நேர்மையான விமர்சன நோக்குக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலே நாவலின் பங்கு மிக மிகச் சொற்பமாகும். ஈழத்துப் பத்திரிகைகளில் அவ்வப்போது சிலரின் படைப்புகள் தனியுரிமை நிலையில் வெளியாகி, நம் நாட்டு நாவல்கள் என்று அப்போதைய 'விமர்சகர்'களால் வர்ணிக்கப்பட்ட போதிலும், சிறந்த வாசகனின் இலக்கிய நோக்கின் முன் அவை வலுவழந்தே காணப்படுகின்றன. ஏனெனில் அவையாவும் நம் நாட்டையும், நமது மன உணர்ச்சிகளையும், வாழ்க்கைச் சிக்கல்களையும், அவற்றின் முடிவுகளையும் விளைவுகளையும்-சித்தரிப்பதாக வாசகர்களை ஏமாற்ற முயன்ற 'பம்மாத்து' நாவல்களாகவே விளங்கின.

### வெற்றி

இன்னும் அத்தகைய விளைவுகள் ஏற்படாமலில்லை. அதாவது நம்நாட்டைப் பற்றிய, கீழைத்தேய பண்பாட்டு மனோபாவ விளைச்சலில்லாமல் இலக்கிய பரிசோதனை என்ற களத்தில், சோதனையின் நோக்குப்புரியாமல், மேலைத்தேய பண்பாட்டில் மலர்ந்த அனைத்தையும் நம் மண்ணில் உற்பவிக்க முயன்று, குறைப் பிரசவமான கோரபிண்டங்களை அறிமுகப்படுத்தும் பணி இன்றும் நடைபெற்று வருகின்றது. ஆனால்—

'சடங்கு' என்கின்ற இந் நாவல் பரிசோதனை நிலையில் மட்டுமல்லாமல், நம்நாட்டு சமுதாய நலக்கண்ணோட்டத்துடன் பாரபட்சமற்ற முறையில், வாழ்க்கையின் இயல்பான ஓட்டத்திலே நடத்திச் செல்வதன் காரணத்தால் பெற்ற வெற்றியாலும் 'நம்நாட்டு முதல் நாவல்' என்று நாம் பெருமிதத்துடன் அறிமுகப்படுத்தும் வண்ணம் இலங்குகின்றது. இந்நாவலின் மூலம் நம் நாட்டின் ஒரு பான்மையினரின் நடைமுறைச் சித்திரம்-அல்லது பிரதிநிதித்துவம் வெளியாகி உள்ளது என்றும் கூறலாம்.

### (2)

தமிழில் படிக்க வேறு வழியில்லாமல் தென்னிந்தியப் பத்திரிகைத் தொடர் கதைகளைப் படித்துச் சலிப்பும், விரக்தியும், வெறுப்பும், பயமும் அடைந்திருந்த நமக்கு—'முன்வீட்டி லேயே அபயம்கூறி, அந்த வாக்கையும் காப்பாற்றியுள்ளார் ஆசிரியர். அந்த முன்வீடு இல்லாவிட்டாலும் நம்மால் நாவலையும் சரியாக புரிந்து கொள்ள முடியாது போயிருக்கும். இந்நாவலின் அடிநாதமாக ஒலிப்பதை மேனாட்டு உளவியல் சிந்தனையாளர்களாகிய சிக்மண்ட் பிராய்ட், அட்லர், இயன்சட்டி போன்றோரின் கருத்து மோதல்களும்-எஸ். பொன்னுத்துரை அவர்களின் நம்பிக்கைகளுமே ஆகும். முன்னே கூறப்பட்ட மூவரும் மனோதத்துவ அடிப்படையில் சமூக இயக்கங்களுக்கான காரணங்களை ஆராய்ந்தவர்கள். பிராய்ட்-'உலகின் இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் பாலுணர்ச்சியே அடிப்படை'-என்றார்.

### தொனி—கரு

அட்லரும் இதனையே ஏறக்குறைய கருத்தாக கொள்ள, இயன்சட்டி 'சூழலே மனித இயக்கங்களை நிர்ணயிக்கின்றது' எனக்கொண்டார். இக் கருத்தினையே 'எஸ். பொ.' நம்புகின்றார் என்பதனை யாழ்ப்பாண குடாநாட்டு சூழலில் பிறந்த 'சடங்கு' கூறுகின்றது. இக்கருத்தின வலுவிற்கு மனோ இயல் மட்டுமல்லாது பொருளியல் தத்துவமும் வலுவளிக்கின்றது என்பதனை—'மனித வுணர்ச்சிகளை சூழலே நிர்ணயிக்கின்றது'-என்ற கார்ல் மாக்ஸின் கூற்றும் உறுதியளிக்கின்றது. ஆகவே-, 'எஸ். பொ.'வின் நாவலின் தொனிப் பொருளாக இக் கருத்துக்கள் மின்னுவதால், கருப்பொருள் அமைதியிலும் நாவல் சிறப்படைகின்றது. சுருக்கமாக கூறப்போனால்-இத்தத்துவக் கோட்பாடுகளின் 'கலைவிசாரணை'யே சடங்கு!

### (3)

கதை நிகழும் இடமும் காலமும் இந்நாவலின் சிறப்பை உயர்த்துகின்றன. நாவல் முழுவதும் ஐந்தே ஐந்து நாட்களில் நடைபெறும் சம்பவங்களில் அமைகின்றது. ஒரு முழுமையான நாவலின் கதைக் காலம் ஐந்து நாட்கள் என்னும் போது நமக்கு வியப்பே எழுகின்றது. மூன்று, நான்கு தலைமுறைக் காலங்களை தம் நாவலில் உள்ளடக்கியும் நாவலைப் பூரணமாக்க இயலாது தவிக்கும் ஆசிரியர்களிடையே, 'எஸ். பொ.' வியப்பாளராகி நிற்கிறார். தென்னிந்திய இலக்கிய பரிசோதனையாளர் க. நா. சு. தனது 'ஒரு நாள்' - என்ற நாவலை ஒரு நாள் நிகழ்ச்சிக்குள் அடக்கிய போதும்-ஒருநாள் நிகழ்ச்சியில் அமையும் பல வேறு வரலாற்றுக் கூற்றுகள் ஒவ்வொன்றும் பல தலைமுறையை ஒட்டியவை. அதே வேளையில் அவை நாவலுடனும் ஒட்டி நிற்காமல் தனித்தே இயங்குகின்றன. ஆனால்-இந்நாவலின் ஒவ்வொரு நாட்சம்பவமும் மூலக்கருத்துடனும், கதாநாயகனுடனுமே இயங்குகின்றன.

கதை நிகழ்கின்ற இடம் யாழ்ப்பாணமே 'எஸ். போ.' தனது கருத்து விளக்கங்கட்கு உருத்தேட யாழ்ப்பாணக் களத்தைவிட வேறு எதுவும் சரியாக அமைந்திராது. இந்த நிலைக்களத்தேர்வே அவர் நாவலின் பண்பினை ஒருபடி உயர்த்தி நிற்கின்றது. யாழ்ப்பாணத்தைப் பற்றி அறியாதவர்களுக்குசரியான யாழ்ப்பாணத்தை ஆசிரியர் காட்டியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அகம்—புறம்

யாழ்ப்பாணத்தவர்களில் வாழ்க்கை நடைமுறையை அவதானித்தால்- பண்டைத் தமிழர் வாழ்வு போல் அகம், புறம் என இரண்டாக வகுக்கலாம் அகவாழ்வு என்பதனை ஊரோடு வாழும் வாழ்க்கையைக் கூறுவதாக கொண்டால், புறவாழ்வு என்பது யாழ்ப்பாண குடாநாடு நீங்கிய (ஆனையிறவு தாண்டிய) வாழ்வைச் சொல்லலாம். புறவாழ்விலே யாழ்ப்பாணத்தவரின் அகத்துறை எண்ணங்கட்கு ஒரு அர்த்தமிருந்தால் அது-எப்படியாவது பொருளீட்டுவது-ஊர் திரும்பும் வரை உள்ள காலத்தை எப்படியாவது 'போக்குவது' இந்தவித உணர்வுகளிலேயே அவர்கள் இயங்குவார்கள் இந்த இயக்க நிலையிலே அவர்கள் பாரம்பரியமாக தமது யாழ் மண்ணிலே உற்பவித்து வந்த சம்பிரதாய பழக்க வழக்கங்களை சடங்குகளைத் துறந்து விடுகிறார்கள். ஆனால்—

யாழ் மண்ணில் காலூன்றியவுடனேயே, அவர்கள் பழைய சம்பிரதாய பழக்க வழக்கங்களின் சடங்குகளின் அனுஷ்டாதிபதியாகி விடுகிறார்கள். அங்கு நிலவும் சூழலும், அதனது மனோபாவ உணர்வுகளும் அவர்களது அகவுணர்வின் ஒவ்வொரு எல்லையையும் கட்டுப்படுத்தி நிற்கின்றன. இவ்விரண்டு முரண்பாடான எண்ண உணர்ச்சிக்கோவையை, முன்னே கூறிய உளவியல் தத்துவம் என்னும் சரட்டிலே பிணைக்கும் முயற்சியாக இச் சடங்கு அமைகிறது.

### 4

சடங்கின் கதையிலே வியந்து கேட்ட சம்பவங்களில்லை. ஆச்சரிய முடிவுகளில்லை. ஆனால், வாசகர் ஒவ்வொருவரையும் பிணிக்க வல்ல வாழ்க்கைச் சித்திரமாக, ஒரு கலைப்பிடிப்பாக (நமக்கு அருமையாக பார்க்க கிட்டும் சத்ய ஜித் ரேயின் படம் போன்று) அமைந்து - வாழ்க்கையை வாழ்ந்துகாட்டியவர்களுக்கு பழைய நினைவுகளையும், வாழுகின்றவர்களுக்கு தமது வாழ்க்கை அனுபவங்களையும், வாழப் போகிறவர்களுக்கு ஓர் இன்ப - இனிய நாடகஉணர்வினையும் வாழ்க்கையின் தாற்பரிய உணர்வினையும் இது ஏற்படுத்தியதால் - சடங்கு ஒரு பரந்த வாசகர் கூட்டத்தைப் பெறுகின்றதாயினும், அதனது தரம் எள்ளளவும் குறையவில்லை.

எத்தனையோ ஆசிரியர்கள் யாழ் மண்ணைச் சித்தரிக்க முயன்ற போதிலும் - திரு- எஸ். பொ-காட்டுகின்ற யாழ்ப்பாணம் - ஒரு மத்தியதர வகுப்பான - கிளறிக்கள் உத்தியோகத்தவரின் பார்வையால் சுட்டி காட்டும் போது, ஒரு உண்மையான யாழ்ப்பாணத்தை தரித்த உணர்வு நமக்கேற்படுகிறது.

செந்தில்நாதன் வீட்டில் நுழையும் போது நடக்கும் உபசாரம் - கணவன் மனைவியரின் வார்த்தைப் பரிமாறல்கள், உணவுப்படைப்பு, செந்தில்நாதனின் 'முழுக்குக்குளியல்' (அவர் துலாத்தள்ளுவது, எலுமிச்சைக்கு தண்ணீர் விடுவது) செல்லப்பாக்கிய ஆச்சி மருமகனுக்கு மரியாதையாக சுருட்டுப் பிடிக்கும் காட்சி, பங்கிறச்சி -எல்லாமே யாழ்ப்பாணம் என்பதனையே முடிக்க முட்டுக்கொண்டிருக்கிறது. இவை எல்லாம் எஸ். பொ. என்கிற ஒரு தேர்ந்த கலைஞனின் சமுதாயத்தின் கூர்ந்த அவதானிப்புகளாகவே உள்ளன; இந்தக் கூர்ந்த அவதானிப்புகளின் விசேடமே இந்நாவலின் உயர்ச்சிக்கு ஒரு காரணம் எனக் கூறலாம்.

அடுத்ததாக - இதில் வருகின்ற பாத்திரங்களின் ஒவ்வொன்றின் குணாதிசயங்கள் - அநாயாசமாக கீறி விடப்பட்ட நாலைந்து கோடுகளால் உணர்ச்சிகளையும் உண்மைகளையும் புறப்படுத்தும் சிறந்த கூட்டார்த்த சித்திரங்களாக (Cartoons) மிளிர்கின்றன எனலாம். நாவலின் உன்னத பாத்திரம் செல்லப்பாக்கிய ஆச்சி. அழகான பாத்திர அமைப்பு. சிறந்த குணசித்திரப் படப்பிடிப்பு. யாழ்ப்பாணத்தைப் புரிந்து கொள்ள அவர் ஒன்றே போதும். யாழ்ப்பாணத்தவரின் மனோ பாவங்கள், நடைமுறைகள் ஒவ்வொன்றும் காரணகாரியத் தொடர்புடன் இயங்குகின்றது என்பதற்கு அவள் சிறந்த எடுத்துக் காட்டு.

### மேய்ப்பார்கள்

யாழ்ப்பாணக் குடும்பங்கள் பலவற்றின் 'மேய்ப்பாளுக' விளங்குபவர்கள் அங்குள்ள கிழங்களே. அவர்களது சட்ட திட்ட ஒழுங்குகளின் படியே குடும்பங்கள் இயங்க வேண்டும். குடும்பத்தின் நல்லது கெட்டதுகளை நிர்ணயிப்பவர்கள் இவர்களே! வெளிப்பார்வைக்கு இவர்கள் கண்டிப்பானவர்களாக தென்பட்டாலும் அவர்களைப் போல் குடும்பத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள் வேறிலர். அவர்களில் ஒருத்தியே செல்லப்பாக்கிய ஆச்சி. கடமையுணர்வும், கண்டிப்பான நடைமுறையும் கொண்டவள். அவளுடன் ஒப்பிடும் போது நமது செந்தில்நாதன் கூட பின் வாங்கிவிடுகிறார்.

### 5

'ஏங்க இங்கின டாக்டர் மு. வ. வைப் போல யாரும் எழுதுவினமே!' என்ற வார்த்தை மூலம் யாழ்ப்பாணத்தவரின் இலக்கிய இரசனையை கிண்டல் செய்யும் ஆசிரியர் தன்னையும் உள்ளிழுத்து விடுகிறார். இது சடங்கின் ஒரு கூற்றை பாதிக்கிறது. ஏனெனில் எஸ். பொ. ஒரு சமூகப் பிரச்சினையல்ல. அவர் தனி மனிதர். ஆகவே, ஒரு சமுதாயப் படப்பிடிப்பில் ஒரு முழுமையான உருவே வெளிவரவேண்டும்.

எவ்வாறு நோக்கினும் - எஸ். பொ. வினது எழுத்து நிலையிலும், நாவல் வரலாற்றின் மரபு நிலையிலும் சடங்கு ஒரு உன்னத நிலையை வகிக்கிறது - வகிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.


வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்



பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தந்தி: தாமரை

தொலைபேசி: 3597-6522

# உங்கள் நோய்?

பதிலளிப்பவர்:

**வைத்தியகலாநிதி என். கந்தையா**

செ. ஆறுமுகம்,
பேசாலை.

கே: பொந்திரியக்கட்டு வருவதன் காரணமென்ன. இதற்கு அறுவை சிகிச்சை செய்தால் மீண்டும் வருமா? அப்படியானால் இதற்கு பரிகாரம் என்ன? இவர்கள் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் என்ன? வயது 28.

ப: இது மலவாசலைச் சுற்றி வெடிப்புகள் ஏற்படுவதனால் ஏற்படும். இதனால் சீழும், இரத்தமும் கசியும். மூலரோகத்தின் ஒரு பிரிவாகக் கருதுகின்றார்கள். நாற்காலி உத்தியோகஸ்தரையும், அதிக மதுபானம் அருந்துவோரையும்; கெற்பணிகளையும் மிகவும் இலகுவில் தாக்க கூடியது காரணம் தகுந்த அளவு தேக அப்பியாசம் இன்மையே.

இதற்கு அறுவை வைத்தியம் சிறந்ததெனினும் திரும்பவும் வராது என்பது நிச்சயமில்லை.

உணவு வகையில் மிகவும் கவனமெடுத்தல் வேண்டும். மரக்கறி, கீரை, முதலியனவும், சிறு மீன், முட்டை போன்றன பாவிக்கலாம். பொரித்த - வறுத்த உணவு வகைகளும், இலகுவில் செமிக்க முடியாத பொருட்களையும் விலக்கல் வேண்டும்.

உடல் அப்பியாசமும், உள்ள நிறைவும், ஒய்வும் மிகப் பிரதானம்.

பாலச்சந்திரன்,
கொழும்பு - 7.

கே: என் வயது 16. நான் எவ்வளவு சாப்பிட்டும் என் உடம்பு பருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன் கட்டையாகவுமிருக்கின்றேன். எனவே வளர்வதற்கும், உடம்பு தேறுவதற்கும் வழி கூறுங்கள்.

ப: உடம்பு பருப்பதற்கும்: வளர்வதற்கும் இன்னும் 4 ஆண்டுகள் இருக்கின்றன. இனி மேல் நீர் ஆச்சரியப்படும் வரையில் வளர்ந்து பருப்பது மாத்திரமல்ல, குரலிலும் ஒர் கனிர் என்ற ஓசை பிறக்கும்.

பூச்சி மருந்துகள் பாவித்துவரின் சிலநன்மைகள் ஏற்படும்.

எஸ். பிலோமினு,
யாழ்ப்பாணம்.

கே: நான் ருதுவாகி மாதவிடாய் ஒழுங்காக வருவதில்லை. மணமாகிய பின்பும் அப்படியே. டாக்டர் பரிசோதித்து 'பில்ஸ்' தந்தால் தான் மாதவிடாய் வரும். இதனால் முட்டு, மூச்சு ஏற்படுகின்றது. தற்போது வயது 28. இதற்கு தங்கள் உதவியை நாடுகின்றேன்.

செல்வி. செ. தவபாக்கியம்,
பெரியபளை.

கே: சுமார் 16 வயதுடைய எனக்கு இரு வாரத்துக்கு ஒரு முறை தடிமல் வருகின்றது. இதனை நீக்க தக்க ஆலோசனை தரவும்.

ப: சிலருக்கு இது மிகவும் சர்வ சாதாரணம். உயிருட்டி C சத்து இன்மையாலும், வெய்யில், மழை, குளிர் காற்று இவற்றாலும் அடிக்கடி ஏற்படுகின்றது படுக்கும் அறை தகுந்த காற்றோட்ட முள்ளதாக இருத்தல் வேண்டும். வியர்வையுடன் குளித்தல் நன்றல்ல நெல்லிக்கனி, தேசிப்பழம், தோடம்பழம் முதலியன அருந்தி வரவும் தடுமல் ஏற்பட்டால் கவனமாக இருத்தல் அவசியம்.

க. கந்தசாமி,
சுதுமலை.

கே: எனக்கு சிலகாலமாக இருமல் இருக்கின்றது. டி.பி. யாக இருக்குமோ எனச் சந்தேகப் படுகின்றேன். டி. பி. யின் அறிகுறிகள் என்ன வென்று தெரிவிப்பீர்களா? வயது 28.

ப: இரவில் காய்ச்சல், இருமல், அதுவும் வரட்டிருமல் இருந்தாலும், உடம்பு வரவர மெலிவடைவதனாலும், எவ்வளவு தான் சிறந்த ஆகாரம் உட்கொண்டும், சரியான சிரணிப்பு இன்மையினாலும், கண் குழிவிழுந்து, பார்வைக்கு மிகவும் துர்ப்பல வினமாக இருந்தாலும் டி. பி. என சந்தேகிக்கலாம்.

அன்றியும், இருமல், விட்டு விட்டும்; வெங்கல சப்தமாக இருந்தாலும், இருமி சளிவரும் போது, இரத்தமும் சேர்ந்து வந்தாலும், டி. பி. இருக்கென அவதானிக்கலாம்.

இருந்தும், பக்கத்திலுள்ள வைத்தியசாலைக்கு சென்று. எக்ஸ்ரே படம் பிடித்து நிச்சயப் படுத்திக் கொள்வது சிறந்தது மாத்திரமல்ல அறிவுடைமையுமாகும்.

## பொந்திரியக்கட்டின் காரணங்கள்

## காசநோயின் அறிகுறிகள் என்ன?

ப: தகுந்த அளவு தேகப்பியாசம் தேவை. உணவு வகையில் கவனம் செலுத்துதல் அவசியம். பூண்டு, சீரகம்; மிளகு, மல்லி, முதலியவை சேர்ப்பதனால் நல்ல குணம் கிடைக்கும். இரவில் சோறு கறிக்குப் பதிலாக மெல்லிய உணவும் பழவகையும் நல்ல பலன் தரும்.

மாதவிடாய் ஏற்படும் காலங்களில் வேப்பம் சமூலம் இடித்து சாயம் காச்சி குடிப்பது நன்று.

"அல்போன்ஸ்"
மன்னர்.

கே: எனது சொந்த ஊர் மன்னார். வேலை செய்வது கொழும்பு. எனக்கு ஊருக்கு போனால் தொய்வுண்டு. ஆனால் கொழும்பில் இருந்தால் இல்லை. ஊருக்கு போனால் வருகின்றது. இதற்கு யாது செய்ய வேண்டும்.

ப: உமது வீட்டில் அலேர்ஜிக் உண்டாக்கக் கூடிய பூண்டுவகைகள், நாய், பூனை, கோழி முதலியனவை இருந்தாலும் ஏற்படலாம். மன்னருக்கும், கொழும்புக்கும் ஏறக்குறைய ஒரேசுவாத்திய நிலைமிருக்கும்.

எனவே சுவாத்திய நிலை வேறுபாட்டால் ஏற்படக் காரணமில்லை.

செல்வி. பொ. புஸ்பராணி,
கொழும்பு-2

கே: எனக்கு வயது 19. அதிகமாக தலையிடியும், சில வேளைகளில் உடல் நடுக்கமும் இருக்கின்றது. என்ன செய்வது நல்லது.

ப: நல்ல வெளியில் உலவி வருவது சிறந்தது மலசல ஒழுங்கு மிகப் பிரதானம். பால் மரக்கறிவகைகள் பழவகைகள், உணவுடன் சேர்த்துவரல் வேண்டும்.

மனதுக்கு, மகிழ்ச்சியும், உடலுக்கு வலுவும் வனப்பும் வேண்டும். எனவே உமது நண்பர்களுடன் காலிமுக மைதானத்தில் உலவி வருவது நன் நல்லவா?

எஸ். வி. கே.
கண்டாவளை.

கே: எனது வயது 19; ஏறக்குறைய ஒரு மாதமாக வயிற்று உளைவு இருக்கின்றது. எவ்வகைச் சிகிச்சை பெறலாம்.

ப: வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுவது நல்லது.

---

# நாட்டை நிர்ணயிப்போம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உப உணவுப் பொருட்களில் பெரும்பகுதியையும் பருத்தி, பருத்தி நூல், புடவையையும், கரும்புத்தடி சிறிய தொழிலாலைகளிலிருந்து நாட்டைத் தன் நிறைவாக்கக் கூடிய தொகையில் சீனியையும் ஏற்றுமதிக்குப் போதிய அளவு கொடி முந்திரியையும் வேர்க் கடலையையும் உற்பத்தி செய்ய முடியும் என்று நாம்நம்புகிறோம். அத்துடன் உள்ளூர்த் தேவைக்கும் ஏற்றுமதிக்குமென கடலிலும் நீர் நிலையமீன் வளர்ப்புத் திட்டங்களிலும் இருந்து போதிய மீன், ஏற்றுமதிக்கு உபவும் பற்றாக் குறையைப் பெருமளவிற் சமாளிக்க மேலதிகநெல்லும் உற்பத்தி செய்ய முடியும். அதேநேரத்தில் அபிவிருத்தி குறைந்த எமது பகுதிகளில் விவசாய மீன்பிடி அபிவிருத்திக்காகப் பாதைபோடுதல் நீர்வள ஆராய்ச்சிகள் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அவசரவேகத் திட்டமொன்றை மேற்கொள்ள நாம் காத்திருக்கிறோம். இவற்றையடுத்து திட்டமிட்ட இளைஞர் குடியேற்ற ஏற்பாடுகளையும் நடைமுறையாக்க வேண்டும்.

### சந்தர்ப்பம் வேண்டும்

பதினேழு நீண்ட வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வயிறொட்டிப் போயிருக்கும் தமிழ்பேசும் பகுதிகளுக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் தமது ஆற்றலையும் கடும் உழைப்பிற்கென நம்மிடத்தே இயல்பாக இருக்கும் உட்திறனையும் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார மீட்சியிலும் முன்னேற்றத்திலும் பங்கை யாற்ற எமக்குச் சந்தர்ப்பம் அளியுங்களென்று மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் நாம் கூறுகிறோம்.

எதிர்காலத்து கைத்தொழிற் திட்டங்களுக்குத் தேவையான முதலீட்டைத் திரட்டுவதற்கு தன் நிறைவு பெற்றஒரு விவசாய அடித்தளமும் அதோடிணைந்த சிறுதொழில்களும் குடிசைத் தொழில்களும் உறுதிவாய்ந்தவையாய் இருக்க முடியும் என்று கூறுவதில் எமக்குத் தயக்கமெதுவும் இல்லை.

பெரியகைத் தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கு பெரிய உள்ளூர்ச் சந்தைகள் இருக்க வேண்டும். ஆனால் பெரிய கைத்தொழில் நிலையக் கோவைகளைத் தாங்கவதற்கு முடியாத அளவிற்கு மக்களின் கொள்முதற் சக்தி பெலமற்றிருக்கிறது. திடமான உள்ளூர்ச்சந்தைஎன்ற காப்புறுதியின் பேரிற்றன் உற்பத்தியாளர் வெற்றியளிக்கக்கூடிய ஒரு ஏற்றுமதிச் சந்தையைப்பற்றிச் சிந்திக்க முடியும்.

திட்டமிட்டு ஒன்றிணைக்கப்பட்ட விவசாயத்தின் மீதும் அதோடு சேர்ந்து சிறு தொழில் குடிசைத்தொழில் மீதும்தான் இன்றைமது நாட்டு நிர்மாணம் அமைக்கப்பட வேண்டும்.

எமது தாய்நாட்டை நிர்மாணிக்கும் இப்பெரும் பணியில் எம்மோடு ஒன்றிணைந்து பணியாற்றவாருங்களென்று உங்களுக்கும் எதிர்பாராத காரணங்களினால் இங்கு வரமுடியாது போனவர்களுக்கும் அழைப்பு விடுகிறேன். நாட்டைநிர்மாணித்தல்என்பது வீதிகள் பாலங்கள்பாடசாலைகள் வைத்திய மனைகள் குடியேற்றத் திட்டங்கள் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவது மாத்திரமல்ல. நாட்டின் நிர்மாணம் என்பது மனிதநோக்கத்தையும் குணதிசயத்தையும் நிர்மாணிப்பதேயாகும். மக்களின்மனிதம்சம் உயர்வாக்கப்பட்டால் சிந்தனையிலும் செயலிலும் அது விசுவாசமும் நேர்மையுமுற்றிருந்தால் அதுவே உண்மையான நாட்டு நிர்மாணமாகும். அத்தகைய ஆடவரையும் பெண்களையும் கொண்ட ஒருநாட்டினத்தை நாம் உருவாக்கிவிட்டால் அதன் பின்னர் வேண்டிய அனைத்தும் தாமே வரும்; உலகமே எமது காலடியிற் கிடக்கும்.

### முடிவு

நாற்றுண்டு காலமாக அன்னிய ஆட்சியிலும் அதற்கு முன்னர் நமது சொந்த நிலப்பிரபுத்துவ மன்னர்களின் கீழும் அடிமைப்பட்டிருந்தும் கடந்த பதினெட்டு வருடகாலங்களாக தற்போதைய அரசமைப்பின் கீழ் பாரபட்சம் காட்டப்பட்டும் எதிர்காலத்தைப்பற்றிப் பயந்து கொண்டிருந்த தமிழ்பேசும் மக்களுக்கு புத்துயிரளித்து உயர்ந்தவர்களாயும் பெரியவர்களாயும் அவர்கள் ஆக்கப்படவேண்டியது அவசியம். அதுதான் நான் கருதும் உண்மையான நாட்டு நிர்மாணம் ஆகும்.

தமிழ்பேசும் மக்களில் விசுவாசமும் நம்பிக்கையும் வைத்துஎன்இதயம்நிறைந்த பிரார்த்தனையுடன் நான்ஒரு கவிஞனின் வார்த்தைகளை இங்கு கூறி முடிக்கிறேன்.

எம்மும் இவைகள் இனி ஆம்
இனமொன்று
வையம் இந்த வரையும்
அறியாத
வண்ணம் எழுந்து
வளரும்—அறிவொளிரும்
கண்ணும் கருந்நிரந்தைக்
காதலிக்கும் ஆவியுமாய்.

# தகிப்பு

"அன்னல்"

ஆணவத்தால் செத்தே அழிந்தேன் அரும்பினிலே
மானுயர்ந்த பூளை மலரென்றேன்—வீணதும்
காலச் செலவால் கனியாக வேண்டியவன்
மாழ வகுத்த வழி.

எண்ணப் பழவை இதயஞ் சுமக்காத
வண்ணம் பெருத்தே வளர்ந்தேன்—என்னுள்ளே
பூத்தமலர்க் கொம்பென்றே பூரித்தேன்-மன்னுற்றேன்
காய்த்துக் கனியாக் கனி.

கூவுங் குயிலின குளிர்ந்தவிசை நாராசம்
நூவும் எனத்துடித்துச் சேர்ந்தவனப் —நோவுடனே
சத்தமெழுப்பிச் சரிக்கட்டப் பார்க்கின்றேன்.
புத்திப் பிசகோ விது?

நாட்டாண்மை காட்டி நகுக்க முனைந்ததிலே
ஊட்ட மிலேயென் றுணராதே—ஆட்டமிடும்
எண்ணம் எழும்பி இருந்தோர் கலந்துவிட
தன்னந் தனித்தேன் தகிப்பு.

சிம்மா சனத்திலே சீர்பெற்றே சாமரமும்
எம்மருங்கும் வீசி இருந்ததுவாய்-பம்மாத்தும்
பண்ணி மிருந்தேன்,. பழுதே தெரியாமல்
எண்ணுவதால் என்ன பயன்?

அத்திப் பழத்தின் அழகில் அமைந்துள்ள
சித்தந்தந்டுமாறிச் சேர்ந்துள்ளேன்—வித்தகனே
என்றென்னுள் நானே இறுமாந்திருந்ததிலே
பின்னல் விழுந்த பிசகு

ஒப்பாரி சொல்லி ஒழியா திருந்திருந்தே
எப்படியுங் குற்றம் எழுப்புவதில்—ஒப்பேறும்
உள்ளத்தில் சாந்தி ஒழுங்கா? அதற்கென்ன
வெள்ளத்துக் கொண்டே வடிவு

## ஜனத்திரள் மிகுந்த திரைகளில் இப்பொழுது காட்சியளிக்கிறது



**எல்பின்ஸ்டன்**—(மருதானை) **ரொக்சி**—(வெள்ளவத்தை)

மற்றும் திரைகளில்

கலைக்கதிரவன் எஸ். எஸ். ராஜேந்திரன், கலைமதி விஜயகுமாரி, நாகேஷ், அஞ்சலிதேவி நடித்த

# பூமாலை

கதை வசனம் — கலைஞர் மு. கருணாநிதி
டைரக்ஷன் — ப. நீலகண்டன்
தயாரிப்பு — முரசொலி மாறன்

## இப்பொழுது காட்சியளிக்கிறாள்!

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

# வீரமங்கை

* என். டி. ராமராவ், * ஜமுனா, * எஸ். விஜயலட்சுமி நடித்த

---

## ஜனத்திரள் நிறைந்த படமாளிகைகளில்

# 4-வது மகத்தான வாரம்!

**திடுக்கிடும் சம்பவங்கள்! திகைப்பூட்டும் மர்மங்கள்!**

சாகசச் செயல்களும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த துப்பறியும் நவீனம்!

* சென்ட்ரல் (மருதானை) * ஈரோஸ் (பாமன்கடை) * ராணி (யாழ்ப்பாணம்) * ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) * லிபர்டி (ஹட்டன்)
* ஜோதி (திரிகோணமலை) * ஆனந்தா (கம்பளை) * ராஜேஸ்வரன் (கிளிநொச்சி)

ஸ்ரீ பாலமுருகன் பிலிம்ஸார் அளிக்கும்



# தாழம்பூ



எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். விஜயா, நம்பியார், அசோகன், எம். ஆர். ராதா, மணிமாலா, நாகேஷ், மனோரமா, புதுமுகம் ராதா ஆகியோர் நடித்தது.

டைரக்ஷன்: என்.எஸ்.ராம்தாஸ்

திகிலூட்டும் சண்டைக் காட்சிகள்! களிப்பூட்டும் காதல் கட்டங்கள்!
உணர்ச்சி மிக்க—உயர்ந்த நடிப்பு! உள்ளத்தைத் தொடும் சிறந்த கதையமைப்பு!
சிறந்த குடும்பச் சித்திரத்துக்கு வேண்டிய சகல அம்சங்களையும் கொண்டது.
இன்றே பார்த்து மகிழுங்கள்.

கதை வசனம்: ஆரூர்தாஸ்

---

# மகத்தான மூன்றாவது வாரம்



**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

★ தியாக உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் சிறந்த திரை ஓவியம் ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை.
★ ஒரு பெண் பைத்தியமாக இருந்த போது எதற்கோ சிரித்தாள்...எதற்கோ...அழுதாள்...ஆனால் மனநிலை தெளிந்த பிறகு எதற்கோ துடித்தாள்...
★ கல்யாணப் பரிசின் வசந்தி நெஞ்சில் ஓர் ஆலயத்தின் சீதா, இன்று வெண்ணிற ஆடையின் சோபாவாக மலர்ந்திருக்கிறார்.
★ ஸ்ரீதரின் கற்பனைத் தோட்டத்தில் பூத்த மற்றொரு புனித மலர்தான் வெண்ணிற ஆடை!



கவர்ச்சி நடிகை ஜெயலலிதா, ஸ்ரீகாந்த், மூர்த்தி பீ. ஏ., நிர்மலா, சுந்தரராஜன், ருக்மணி, ஆஷா நடிப்பது.

சித்திராலயா அளிக்கும்

# வெண்ணிற ஆடை (ஈஸ்ட்மென் கலர்)

இசை **விஸ்வநாதன் ராமமூர்த்தி** பாடல்கள் **கண்ணதாசன்**
கதை, வசனம், டைரக்ஷன் **ஸ்ரீதர்**



இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஜூலை மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.